4. ஏனைய பாவனைப் பொருட்கள் - ஆகுசெலவு

### 1.6.3. ஆதணங்கள், இயந்திர உபகரனங்கள்

அ) ஆதணங்கள், இயந்திர உபகரனங்கள் வெளிப்படுத்தப்பட்டிருப்பது ஆகுசெலவுக்கு அல்லது திரண்ட தேய்மானத்தை விட குறைந்த மதிப்பீட்டிலே ஆகும். ஆதணங்கள், இயந்திர உபகரனங்கள் இணங்காணப்பட்டிருப்பது மீளமைத்தல், பொருத்தமான நடவடிக்கையை செய்தல் அல்லது அதை பயன்படுத்தலினால் எதிர்கால பொருளாதார நண்மை எதுவும் எதிர்பார்க்காத சந்தர்ப்பங்களில் ஆகும். சொத்துக்களை இணங்காணுவதால் ஏற்படும் ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் சொத்துக்களை இணங்காணும் வருடத்தின் வருமான அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுளன்ளது.

### ஆ) தேய்மானம்

தேய்மானத்திற்காக நிதியங்கள் கணக்கிடப்பட்டு இருப்பது கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டிற்கான தேய்வுமானத்திற்காக நிதியங்கள் வழங்கப்பட்டே. கீழ்க் காணும் தேய்மானம் விலைகள் உரித்தாகும்..

| வகை | % |
|---|---|
| கட்டடம் மற்றும் மேம்படுத்தல்கள் | 5% |
| அலுவலக உபகரனங்கள் | 10% |
| மோட்டார் வாகனங்கள் | 25% |
| தளபாடங்களும் பொறுத்தல்களும் | 10% |
| பயிற்சி உபகரனங்கள் | 20% |
| இயந்திர உபகரனங்கள் | 20% |
| கணிணி உபகரனங்கள் | 20% |
| மின் உபகரனங்கள் | 20% |

இ) நடைபெற்றவண்ணமுள்ள பிரதான வேலைகள்
செயற்றிட்டங்கள் மதிப்பீடு செய்யப்படுவது பூர்த்தி செய்யப்பட்டுள்ள வேலைகளின் ஆகுசெலவின் படியே.

1.6.4 கிடைக்கபட வேண்டியவை

கிடைக்கப்பட வேண்டிவைகள் வெளிப்படுத்தப்படுவது நன்மைகளற்ற சந்தேகமான கிடைக்கப்பட வேண்டியவைகளுக்கான நிதியம் ஏற்படுத்தப்பட்டே. சந்தேகத்துக்குரிய கடனுக்காக நிதியம் ஏற்படுத்தப்படுவது கடன் பணம் 365 நாட்கள் கடந்த பின்னரும் முழுப் பணத்தையும் பெற்றுக்கொள்வது சந்தேகமான சந்தர்ப்பத்திலேயாகும். .

1.6.5.பணம் மற்றும் பணத்திற்கு சமமானவை.

பணம் ஓட்டம் அறிக்கையிலுள்ள மற்றும் பணத்திற்கு சமமானது அமைக்கப்படுவது வங்கியிலுள்ள பணம் மற்றும் காணப்படும் வங்கி மேலதிக பற்றுக்களுக்கு வெளியேயானது.

## 1.7 பொறுப்புக்களும் நிதியங்களும்

1.7.1 நிதி அறிக்கைகளை தயாரிக்கம் பொழுது அறிந்துகொள்ள முடியுமான சகல பொறுப்புக்களும் கருத்தில்கொள்ளப்பட்டுள்ளது.

### 1.7.2 பதவியணியின் சேவைப் பணிக்கொடைகள்

ஓய்வூதிய சேவைப் பணிக்கொடை கணக்கிடப்படுவது ஒவ்வொரு ஊழியரினதும் முழு சேவைக் காலத்திற்கும் ஒரு வருடத்திற்கு 1/2 மாதம் எனும் அடிப்டையிலாகும்.

எவ்வாறாயினும் 1983 இலக்கம் 12 ஐ கொண்ட சேவைப் பணிக்கொடை பணம் செலுத்தும் சட்டத்தின் பிரகாரம் இந்த பொறுப்பு உரித்தாவது 05 வருடங்கள் தொடர்ச்சியான சேவைக காலமுடைய ஊழியர்களுக்கு மட்டுமே.

இந்த சேவைப் பணிக்கொடை பணத்திற்கு பணம் பெறப்படுவது பொது திறைசேரினாலாகும். இந்த சேவைப் பணிக்கொடையின் பொறுப்பு செயற்றிட்ட பிரிவின் கடன்முறை அடிப்டையில் கணக்கிடப்படுகிறது. இந்த பொறுப்பு தொடர்பாக எந்தவித நிதியமும் ஏற்படுத்தப்படவில்லை.

### 1.7.3 வரைவிலக்கணம் அளிக்கப்பட்டுள்ள பங்களிப்பு திட்டங்கள்

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்

உரிய சட்டத்தின்படி மற்றும் ஒழுங்குவிதிமுறைகளுக்கு அமைவாக ஊழியர்கள் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு தகுதிபெறுகின்றார்கள்

### 1.7.4. அரசாங்க வழங்கல்கள் மற்றும் நிவாரணங்கள்

அ) மீண்டுவரும் செலவிற்கான கொடுப்பனவு வருமானத்திற்கு பற்று வைக்கப்படுவதுடன் வருமான செலவீனக் கணக்கிற்கு வரவு வைக்கப்படுவது மூலதன வழங்கல் கணக்கினாலாகும்.

ஆ)ஆரம்பத்தில் சொத்துக்களுக்கேற்ப வழங்கல்கள் நிறுவனத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற வழங்கல்கள் அவை பிரயோனத்திற்கு பயன்படுத்தும் வரை பொறுப்புக்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. வழங்கல்கள் பிரயோசனத்திற்கு பயன்படுத்தப்படும் பணத்தை திரண்ட வருமான வழங்கலுக்கு மாற்றி அதன் பின்னர் பொறுப்புக்களில் பிரயோசனப்படுத்தப்பட்ட ஆயு காலத்தினுள் கிரமமாக குறைத்தல்.

1.7.5 நிதியங்கள் மற்றும் நிச்சியமற்ற பொறுப்புக்கள்

ஐந்தொகைக் கணக்கு திகதியாகும் போது சகல பொறுப்புக்களுக்காக நிதியங்கள் ஏற்படுத்தப்படுவதுடன் தயாரிக்கப்படுவது அவ்வாறான பொறுப்புக்கள் வளங்கள் மூலத்திற்கு காரணமாக அமையக் கூடிய சந்தர்ப்பங்களில் மற்றும் அந்த மூலங்களில் அளவுகளுக்கமைய நன்பகத்தன்மையுடைய மதிப்பீடு ஒன்று தயாரிக்க முடியும் போதே.

வளங்கள் ஓட்டம் அருகில் இல்லை என்றால் சகல நிச்சயமற்ற பொறுக்கள் நிதி அறிக்கையில் குறிப்பு 27 இன்கீழ் வெளிப்படுத்தப்படும்..

## 1.8 வருமானம் மற்றும் செலவுக் கூற்று

1.8.1 வருமானங்களை அடையாளம் காணுதல்

வருமானங்களை அடையாளம் காணுவது பொருளாதார நலன்கள் அதிகார சபையிடம் வருவதை முடிந்தளவும் வருமானம் மற்றும் திரண்ட, திரண்டதாகக்கூடிய ஆகுசெலவு நன்பகத்தன்மையுடையதாக அளவிடப்படக்கூடிய சந்தர்ப்பத்திலாகும். வருமானம் அளவிடப்படுவது கிடைக்கப்பபட்டுள்ள மற்றும் கிடைக்கப்படக்கூடிய நியாயமாக பெருமதியின் அடிப்படையிலேயே ஆகும்.

வருமானங்களை அடையாளம் கண்டு கொள்வதற்காக கீழ்க் காணும் நியமங்கள் பயன்படுத்தப்படுகிறது.

அ) மீண்டுவரும் செலவுக்காக கிடைக்கப்பட்டுள்ள வழங்கல்

ஆ) மீண்டுவரும் செலவுக்காக பொது திரைசேறியில் இருந்து கிடைக்கப்பட்டுள்ள வழங்கல்கள் வருமானங்களாக அடையாளம் காணுதல்

இ) ஆரம்பத்தில் உதவிகள் வழங்குகின்ற நிறுவனங்கள் ஊடாக கிடைக்கப்படும் வழங்கல்கள் அவை பயன்படுத்தப்படும் வரை அடையாளம் காணுவது பொறுப்புக்களாகவே. வழங்கல்களை பயன்படுத்துகின்ற பணத்தை வருமானத்திற்கு மாற்றப்படுகிறது..

ஈ) யிற்சிப் பாடநெறிகள் மூலம் கிடைக்கப்பெறம் வரமானங்கள் பயிற்சிப் பாடநெறிகளுக்கான மாணவர் கட்டணம் அடையாளம் காணப்படுவது திரண்ட அடிப்படையிலேயே..

உ) மாணவர் உற்பத்திப் பிரிவில் இருந்து கிடைக்கப்படும் வருமானம்

மாணவர் உற்பத்திப் பிரிவுகளின் வருமானங்கள் அடையாளம் காணப்படுவது திரண்ட அடிப்படையிலேய ஆகும்.

ஊ.) **கூலி வருமானம்**

கூலி வருமானங்கள் அடையாளம் காணப்படுவது வரிக் கால எல்லையை அடிப்படையாகக் கொண்டே.

எ.) ஏனைய வருமானங்கள் அடையாளம் காணப்படுவது திரண்ட அடிப்படையிலேயே ஆகும்.

1.8.2 செலவுகளை அடையாளம் காணுதல்

அ) வருமானம் மற்றும் செலவுக் கணக்கில் செலவுகளை அடையாளம் காணுதல். திரண்ட ஆகுசெலவு மற்றும் உரிய விடயங்களில் இருந்து உழைப்பு பற்றி நேரடி பங்களிப்பின் அடிப்படையிலேயே ஆகும். VTASL ஐ நடாத்திச் செல்லும்போது மற்றும் ஆதணங்கள், இயந்திர உபகரனங்கள், வினைத்திறனாக பராமரிக்கப்படும் பொழுதும் ஏற்க நேரிடுகின்ற சகல செலவுகள், வருடத்திற்கான மேலதிகம் அல்லது குறைபாடுகள் கவனத்தில் கொள்ளப்படும் பொழுதும் வருமானத்திற்கு சேர்க்கப்படும்.

| நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **2 சொத்துக்கள், இயந்திர உபகரணங்கள்** | | | | | | | | | | மொத்தம் |
| | காணி | கட்டடங்களும் மேம்படுத்தல்களும் | மோட்டார் வாகனம் | மரத்தளபாடங்களும் பொறுத்தல்களும் | பயிற்சிப் பொருட்கள் | அலுவலக உபகரணங்கள் | மின் உபகரணங்கள் | கணினி உபகரணங்கள் | இயந்திர உபகரணங்கள் | ரூபாய் |
| **ஆகுசெலவ அல்லது பெருமதி** | | | | | | | | | | |
| வருட ஆரம்பத்தில் | 1,750,201,814.06 | 3,002,523,565.92 | 291,798,022.58 | 237,115,732.83 | 1,577,438,789.03 | 86,418,505.30 | 8,093,123.81 | 393,403,812.38 | 83,541,670.56 | **7,430,535,036.47** |
| வருடத்தினுள் சேர்க்கப்பட்டது. | 3,707,107.18 | 139,722,060.60 | 983,718.00 | 20,678,588.45 | 202,285,203.36 | 4,452,515.34 | 551,702.00 | 12,391,715.00 | 1,922,381.25 | **386,694,991.18** |
| வருட முடிவில் | **1,753,908,921.24** | **3,142,245,626.52** | **292,781,740.58** | **257,794,321.28** | **1,779,723,992.39** | **90,871,020.64** | **8,644,825.81** | **405,795,527.38** | **85,464,051.81** | **7,817,230,027.65** |
| **திரண்ட தேய்மானம்** | | | | | | | | | | |
| வருட ஆரம்பத்தில் | 0.00 | 702,617,078.81 | 184,742,694.36 | 84,950,584.25 | 870,492,523.91 | 31,732,609.17 | 3,619,044.29 | 231,758,226.51 | 52,586,386.16 | **2,162,499,147.46** |
| வருடத்திற்கான கட்டணம் | 0.00 | 121,981,427.39 | 27,009,761.56 | 17,284,373.70 | 181,846,293.30 | 5,913,841.15 | 1,005,156.30 | 34,807,460.18 | 6,575,533.13 | **396,423,846.71** |
| வருட முடிவில் | **0.00** | **824,598,506.19** | **211,752,455.92** | **102,234,957.95** | **1,052,338,817.21** | **37,646,450.32** | **4,624,200.59** | **266,565,686.69** | **59,161,919.29** | **2,558,922,994.17** |
| **கப்பட்ட பெருமதி** | | | | | | | | | | |
| 2015 டிசம்பர் 31ஆம் திகதிக்கு | **1,753,908,921.24** | **2,317,647,120.33** | **81,029,284.66** | **155,559,363.33** | **727,385,175.18** | **53,224,570.32** | **4,020,625.22** | **139,229,840.69** | **26,302,132.52** | **5,258,307,033.48** |
| 2014 டிசம்பர் 31ஆம் திகதிக்கு | **1,750,201,814.06** | **2,299,906,487.11** | **107,055,328.22** | **152,165,148.58** | **706,946,265.12** | **54,685,896.13** | **4,474,079.52** | **161,645,585.87** | **30,955,284.40** | **5,268,035,889.01** |
| **2.1 ஆரம்ப மீதி சரிசெய்தல்** | | | | | | | | | | |
| ஆகுசெலவு | | | | | | தேய்மானம் | | | | |
| சொத்தின் வகை | சரிசெய்தலுக்கு முன்னர் ஆரம்ப மீதி | சரிசெய்தல் | சரிசெய்தலுக்கு பின்னர் ஆரம்ப மீதி | | | சொத்தின் வகை | | சரிசெய்தலுக்கு முன்னர் ஆரம்ப மீதி | சரிசெய்தல் | சரிசெய்தலுக்கு பின்னர் ஆரம்ப மீதி |
| கட்டடங்களும் மேம்படுத்தல்களும் | 3,004,791,266.98 | (2,267,701.06) | **3,002,523,565.92** | | | கட்டடங்களும் மேம்படுத்தல்களும் | | 702,979,260.87 | (362,182.06) | **702,617,078.81** |
| அலுவலக உபகரணங்கள் | 86,080,755.30 | 337,750.00 | **86,418,505.30** | | | அலுவலக உபகரணங்களள் | | 31,698,834.17 | 33,775.00 | **31,732,609.17** |
| மொத்தம் | **3,090,872,022.28** | **(1,929,951.06)** | **3,088,942,071.22** | | | மொத்தம் | | **734,678,095.04** | **(328,407.06)** | **734,349,687.98** |

**நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்**

## 2.2 மதிப்பீடு செய்யப்படாத காணி மற்றும் கட்டடங்கள்

1. கீழ்க் காணும் தொழில் பயிற்சிநிலையங்களின் காணி மற்றும் கட்டடங்கள் மதிப்பீடு செய்யப்படவில்லை என்பதனால் அவை வருடாந்த கணக்குகளுக்குள் உள்ளடக்கப்படவில்லை.

- தொழிற் பயிற்சி நிலையம் மாத்தளை – மாத்தளை
- தொழிற் பயிற்சி நிலையம் யக்கலமுள்ள – காலி
- தொழிற் பயிற்சி நிலையம் கினிமெல்லகஹ – காலி
- தொழிற் பயிற்சி நிலையம் அக்மீமன – காலி
- தொழிற் பயிற்சி நிலையம் வதுருவில – காலி
- தொழிற் பயிற்சி நிலையம் கட்டானை – கம்பஹ
- தொழிற் பயிற்சி நிலையம் கிரிந்த – அம்பாந்தோட்டை
- தொழிற் பயிற்சி நிலையம் சிரிபோபுர – அம்பாந்தொட்டை

மேற்குறித்த காணி மற்றும் கட்டடங்களின் மதிப்பீடு செய்யும் வேலைகள் நடைபெற்ற வண்ணமுள்ளதுடன் அவைகளின் பெருமதிகள் 2016 ஆம் ஆண்டு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

2. கீழ்க் காணும் கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருப்பது தொழில் பயிற்சி அதிகார சபைக்கு சொந்தமில்லாத காணிகளில் திறன்கள் அபிவிருத்தி செயற்றிட்டங்களின் அடிப்படையிலான நிதியங்களினாலாகும். மேற்குறித்த காணி மற்றும் கட்டடங்களின் மதிப்பீடு 2016 ஆம் ஆண்டில் உள்ளடக்கப்படும்.

- தொழிற் பயிற்சி நிலையம் பிங்கிரிய – குருநாகல்
- தொழிற் பயிற்சி நிலையம் வேயன்கொட – கம்பஹ
- தொழிற் பயிற்சி நிலையம் யக்கலமுள்ள – காலி
- தொழிற் பயிற்சி நிலையம் நியகம – காலி
- தொழிற் பயிற்சி நிலையம் ருவன்வெல்ல – கேகாளை
- தொழிற் பயிற்சி நிலையம் கந்தளாய் – திருகோணமலை
- தொழிற் பயிற்சி நிலையம் அம்பாந்தோட்டை – அம்பாந்தோட்டை
- தொழிற் பயிற்சி நிலையம் வஸ்கடுவ – களுத்துறை
- தொழிற் பயிற்சி நிலையம் ஹல்துமுல்ல – பதுளை
- தொழிற் பயிற்சி நிலையம் வெலிமட – பதுளை
- தொழிற் பயிற்சி நிலையம் வெல்லவாய – மொணராகல
- தொழிற் பயிற்சி நிலையம் பிபில – மொணராகல
- தொழிற் பயிற்சி நிலையம் மிஹிந்தலை – அனுராதபுரம்
- தொழிற் பயிற்சி நிலையம் கல்னேவ – அனுராதபுரம்
- தொழிற் பயிற்சி நிலையம் மிஹிந்தலை – அனுராதபுரம்
- தொழிற் பயிற்சி நிலையம் தபுத்தேகம – அனுராதபுரம்
- தொழிற் பயிற்சி நிலையம் ராஜாகனய – அனுராதபுரம்
- தொழிற் பயிற்சி நிலையம் மின்னேரிய – பொலொன்னருவை
- தொழிற் பயிற்சி நிலையம் யடியன்தோட்டை – கேகாளை
- தொழிற் பயிற்சி நிலையம் கிலிநொச்சி – யாழ்ப்பாணம்
- தொழிற் பயிற்சி நிலையம் இரத்மலானை – கொழும்பு

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

| | | குறிப்பு | 2015 | 2014 |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. |
| 3 | **மூலதன வேலைகளின் முன்னேற்றம்- கட்டடம்** | | | |
| | அம்பாறை | | 13,317,157.42 | 7,299,086.63 |
| | அனுராதபுரம் | | 390,637.50 | 390,637.50 |
| | பதுளை | | 19,064,397.56 | 3,777,930.55 |
| | மட்டக்களப்பு | | 158,850.00 | |
| | கொழும்பு | | 1,714,442.53 | 3,644,120.80 |
| | கம்பஹ | | 339,733.50 | 339,733.50 |
| | காலி | | 3,405,037.56 | 2,686,067.56 |
| | அம்பாந்தோட்டை | | 18,258,018.77 | 18,258,018.77 |
| | யாழ்ப்பாணம் | | 37,148,386.74 | 450,892.50 |
| | களுத்துறை | | 3,964,497.60 | 8,675,858.90 |
| | குருநாகல் | | 221,247.00 | 221,247.00 |
| | மாத்தளை | | | 34,935,846.55 |
| | மாத்தறை | | 17,729,439.62 | 176,712.00 |
| | நுவரெலியா | | 13,049,580.77 | 1,994,057.55 |
| | புத்தளம் | | | 27,569,676.77 |
| | இரத்தனபுரி | | 158,920.50 | 158,920.50 |
| | திருகோணமலை | | | 4,021,177.70 |
| | வேலைகளின் முன்னேற்றம்- இயந்திர உபகரனங்கள் | | | 424,700.00 |
| | | | **128,920,347.07** | **115,024,684.78** |
| 4 | **இன்வென்றீஸ்** | | | |
| | பயிற்சிப் பொருட்கள் | | 22,353,518.82 | 21,040,848.67 |
| | காகிதாதிகள் | | 7,149,429.29 | 6,941,957.55 |
| | மூலப்பொருட்கள் (அச்சககம்) | | | 30,105.00 |
| | ஏனைய நுகர்வுப்பொருள் | | 823,384.20 | 75,698.00 |
| | | | **30,326,332.31** | **28,088,609.22** |
| 5 | **கிடைக்கப்பட வேண்டியவை** | | | |
| | முற்பணம் கொடுப்பனவு T-Shirt (பயிற்சிபெறுநர்) | | | |
| | நிகழ்ச்சிக்கான முற்பணம் | | 82,000.00 | 120,450.00 |
| | வைப்புக்கள் | | 409,750.00 | 281,000.00 |
| | தொழிற் பயிற்சி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சு | | | |
| | ஆரம்ப கொடுப்பனவு | | | 55,714.28 |
| | கிடைக்கவேண்டிய பாடநெறி கட்டண. | | 14,683,894.10 | 15,105,790.10 |
| | கிடைக்கவேண்டிய சம்பளம் | | 1,173,934.93 | 906,172.70 |
| | வருமானக் குறைபாடுகள் | | 11,732.00 | 11,732.00 |
| | அரச அமைப்புக்கள் | | 3,035,710.16 | 3,035,710.16 |
| | வர்த்தக மற்றும் ஏனைய கி.வே. | | 10,977,338.20 | 1,028,962.43 |
| | வாகன சேர்விஸ் வருமானம் கி.வே. | | 519,749.00 | - |
| | | | **34,825,039.63** | **29,444,632.51** |
| | குறைத்தல்:-அறவிட முடியாத கடன் நிதியம் | | **(6,966,641.40)** | **(6,966,641.40)** |
| | | | **27,858,398.23** | **22,477,991.11** |

| நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் | | | |
|---|---|---|---|
| | | 2015 | 2014 |
| | | Rs. | Rs. |
| 6 | **பதவியணிக் கடன்** | | |
| | வருடத்தின் ஆரம்ப மீதி | 47,087,942.80 | 40,197,375.20 |
| | குறைக்கப்பட்டது:- ஆரம்ப மீதி சரிசெய்தல் | | (55,000.00) |
| | மீண்டும் மீதி | 47,087,942.80 | 40,142,375.20 |
| | சேர்க்கப்பட்டது:-வருடத்தினுள் கொடுக்கப்பட்ட கடன் | 43,771,473.41 | 40,908,568.19 |
| | | 90,859,416.21 | 81,050,943.39 |
| | குறைக்கப்பட்டது:-வருடத்தினுள் மீளச் செலத்தப்பட்டவை | (45,495,672.55) | (33,963,000.59) |
| | வருடமுடிவில் மீதி | **45,363,743.66** | **47,087,942.80** |
| 7 | **் மற்றும் பணத்திற்கு சமமான** | | |
| | பணம் பரிமாற்றல் | | |
| | தங்க நாணயக்குற்றி | 104,000.00 | 104,000.00 |
| | **வங்கியில் இருக்கும் பணம்** | | |
| | இலங்கை வங்கி | 67,165.71 | 67,165.71 |
| | கையிருப்பு பணம் | 27,313.00 | 28,483.00 |
| | கையிருப்பு காசோலை | - | 2,065.03 |
| | கொமர்சல் வங்கி | 731,357.25 | 1,249,962.15 |
| | மக்கள் வங்கி | 89,807,163.07 | 71,362,341.87 |
| | | **90,736,999.03** | **72,814,017.76** |
| 7.1 | செலான் வங்கியினால் இரண்டு தங்க காசுகள் அதிகார சபைக்கு நன்கொடையாக கிடைத்தது. ஓவ்வொரு தங்க நாணயக் குற்றி நிறை 8.02 கிராம் மற்றும் 22.03 கெரட்டும் ஆகும். | | |
| 8 | **அரச நன்கொடை- மூலதனம்** | | |
| | வருடத்தின் ஆரம்ப மீதி | 19,253,677.14 | 18,807,318.76 |
| | குறைக்கப்பட்டது:- ஆரம்ப மீதி சரிசெய்தல் | (756,116.50) | - |
| | மீண்டும் மீதி | 18,497,560.64 | 18,807,318.76 |
| | சேர்க்கப்பட்டது:-வருடத்தினுள் கிடைக்கப்பட்ட நன்கொடை | 121,500,000.00 | 204,500,000.00 |
| | | 139,997,560.64 | 223,307,318.76 |
| | குறைக்கப்பட்டது:-தடுத்துவைக்கப்பட்ட வருமான நன்கொடை | (103,858,617.59) | (204,809,758.12) |
| | வருடமுடிவில் மீதி | **36,138,943.05** | **18,497,560.64** |

| நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பக்கள் | | | | |
|---|---|---|---|---|
| | | குறிப்பு | 2015 | 2014 |
| | | | ரூ. | ரூs. |
| 9 | **தடுத்துவைக்கப்பட்ட வருமான நன்கொடை** | | | |
| | வருடத்தின் ஆரம்ப மீதி | | 3,486,332,412.03 | 3,451,139,440.87 |
| | குறைக்கப்பட்டது:- ஆரம்ப மீதி சரிசெய்தல் | | 1,084,523.56 | (2,445,942.39) |
| | மீண்டும் மீதி | | 3,487,416,935.59 | **3,448,693,498.48** |
| | சேர்க்கப்பட்டது:- வருடதா்தினுள் மாற்றப்பட்ட | | 401,015,353.47 | 444,183,115.42 |
| | | | **3,888,432,289.06** | **3,892,876,613.90** |
| | குறைக்கப்பட்டது: வருடத்தினுள் கிரமமாக | | (396,423,846.71) | (405,459,678.31) |
| | வருட முடிவில் மீதி | | **3,492,008,442.35** | **3,487,416,935.59** |
| 9.1 | **தடுத்துவைக்கப்பட்ட வருமானத்திற்கு மாற்றப்பட்டது.** | | | |
| | அரச நன்கொடை-மூலதனம் | | 103,858,617.59 | 204,809,758.12 |
| | ஏனைய நன்கொடை | | 297,156,735.88 | 239,373,357.30 |
| | | | **401,015,353.47** | **444,183,115.42** |
| 10 | **சேவை பணிக்கொடை நிதியம்** | | | |
| | வருடத்தின் ஆரம்ப மீதி | | 282,918,383.10 | 232,261,463.95 |
| | குறைக்கப்பட்டது:- ஆரம்ப மீதி சரிசெய்தல் | | 352,844.00 | 2,003,022.24 |
| | மீண்டும் மீதி | | 283,271,227.10 | 234,264,486.19 |
| | சேர்க்கப்பட்டது: வருடத்தினுள் தயாரிக்கப்பட்ட நிதியம் | | **99,277,549.20** | **57,963,426.32** |
| | | | **382,548,776.30** | **292,227,912.51** |
| | குறைக்கப்பட்டது: வருடத்தினுள் கொடுப்பனவு | | (8,724,868.30) | (8,956,685.41) |
| | வருட முடிவில் மீதி | | **373,823,908.00** | **283,271,227.10** |

| நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பக்கள் | | | | |
|---|---|---|---|---|
| | | குறிப்பு | 2015 | 2014 |
| | | | ரூ. | ரூ. |
| **11** | **செலுத்தப்பட வேண்டிய** | | | |
| | கணக்காய்வு கட்டணம் | | 1,924,000.00 | 1,424,000.00 |
| | காசாளர் வைப்பு | | 25,000.00 | 25,000.00 |
| | செலுத்தப்பட வேண்டிய பாடநெறிக் கட்டணம் | | 451,740.00 | 616,600.00 |
| | வைப்பீடு | | 67,000.00 | 234,500.00 |
| | ஊழியர் சேமலாப நிதியம் | | 14,175,314.95 | 7,298,414.76 |
| | ஊழியர் நம்பிக்கை பொறுப்ப நிதியம் | | 2,126,296.84 | 1,094,762.21 |
| | விரிவுரைக் கட்டணம் | | 1,794,325.00 | 4,877,575.00 |
| | திறன் மற்றும் இளஞர் விவகார அமைச்சு | | | 2,150,000.00 |
| | ஏனைய செலுத்தப்பட வேண்டிய | | 7,170,060.80 | 9,354,508.44 |
| | செலுத்தப்பட வேண்டியெ சயற்றிட்ட நிதியம் | | 10,427,341.81 | 10,427,341.81 |
| | கிடைக்கப்பட வேண்டிய முற்பணம் | | 646,095.00 | 1,514,600.00 |
| | மீளச் செலுத்த வேண்டிய கேள்விப்பத்திர வைப்பு பணம் | | 1,888,531.29 | 1,287,835.95 |
| | தடுத்துவைத்த பணம் | | 15,473,297.26 | 7,795,102.39 |
| | செலுத்தப்பட வேண்டிய சம்பளம் | | 449,003.43 | 1,557,703.42 |
| | செலுத்தப்பட வேண்டிய பதவியணி ஊக்குவிப்பு | | 251,903.65 | 69,360.00 |
| | மாணவர் காப்புறுதி திட்டம் | 11.1 | 24,905,500.00 | 12,309,000.00 |
| | வர்த்தக கடன்பெறுநர் | | 7,639,520.77 | 42,527,688.73 |
| | கையடக்கத் தொலைபேசி ஒதுக்குதல் | | 1,264,640.15 | |
| | வி.அ. மற்றும் த.நி. | | 96,207.76 | 86,314.96 |
| | | | **90,775,778.71** | **104,650,307.67** |
| 11.1 | **மாணவர் காப்புறுதி திட்டம்** | | | |
| | வருடத்தின் ஆரம்ப மீதி | | 12,309,000.00 | - |
| | சேர்க்கப்பட்டது:- வருடத்தினுள் பங்கிளிப்பு | | 12,604,000.00 | **12,337,500.00** |
| | | | 24,913,000.00 | **12,337,500.00** |
| | குறைக்கப்பட்டது:- வருடத்தினுள் கொடுப்பனவு | | (7,500.00) | **(28,500.00)** |
| | வருடமுடிவில் மீதி | | **24,905,500.00** | **12,309,000.00** |

| நிதிக் கூற்றுக்கள் பற்றிய குறிப்புக்கள் | | | | |
|---|---|---|---|---|
| | | குறிப்பு | 2015 | 2014 |
| | | | ரூ. | ரூ. |
| 12 | திரண்ட செலவு | | | |
| | தொழில் வழிகாட்டல் | | 183,020.00 | 270,980.00 |
| | மின்சாரம் | | 2,317,337.56 | 1,521,854.79 |
| | பரீட்சை மற்றும் மதிப்பீடுகள் | | 207,482.00 | 96,659.86 |
| | எரிபொருள் மற்றும் எண்ணெய் | | 48,948.00 | 58,376.00 |
| | சுத்தம்செய்யும் சேவைகள் | | 717,379.00 | 563,595.00 |
| | பராமரிப்பு | | 1,414,185.50 | 1,182,972.27 |
| | பத்திரிக்கையும் வாரசஞ்சிகையும் | | 35,825.00 | 23,350.00 |
| | தொழில் பயிற்சிக்கான கொடுப்பனவு | | 536,250.00 | 578,250.00 |
| | மேலதிகநேரமும் நாள் கொடுப்பனவு | | 863,678.49 | 818,410.53 |
| | பகுதிநேரக் கொடுப்பனவு | | 4,852,415.00 | 4,437,918.17 |
| | மேம்படுத்தல் நடவடிக்கைகள் | | 495,554.56 | 233,743.00 |
| | வாடகை,வரிப்பணம் மற்றும் வரி | | 213,900.00 | 88,476.19 |
| | பருவச்சீட்டுக்கள் | | 545,083.75 | 584,351.02 |
| | பாதுகாப்புக் கட்டணம் | | 4,046,400.00 | 2,705,145.00 |
| | நிறுத்திவைத்த | | 1,535,500.00 | 569,137.00 |
| | தொலைபேசி | | 1,887,616.47 | 1,527,958.36 |
| | ஏற்றல் இறக்கல் | | 77,800.00 | |
| | பிரயாண | | 550,308.80 | 507,673.54 |
| | தண்ணீர் | | 459,083.55 | 813,990.14 |
| | | | **20,987,767.68** | **16,582,840.87** |

**நிதிக் கூற்றுக்கள் பற்றிய குறிப்பு**

| | | குறிப்பு | 2015 | 2014 |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. |
| **13** | **ஏனைய வருமானம்** | | | |
| | நடவடிக்கை வருமானம் | | 415,250.00 | 3,813,333.75 |
| | பாடநெறிக் கட்டணம் | | 119,485,750.00 | 109,004,150.00 |
| | உணவக வருமானம் | | 220,000.00 | |
| | கம்பனி பதிவு | | 108,500.00 | |
| | நாளாந்த தினக்குறிப்பு | | 2,951,000.00 | 2,839,700.00 |
| | தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | | 82,000.00 | 57,500.00 |
| | தண்டப்பணம் | | 69,956.00 | 217,798.40 |
| | மண்டப வருமானம் | | 1,590,800.00 | 1,394,475.00 |
| | விடுதி கட்டணம் | | 414,500.00 | 366,800.00 |
| | கதிர்காம விடுமுறை விடுதி | | 446,275.00 | 415,695.00 |
| | கடன் வட்டி | | 1,857,567.05 | 1,731,641.17 |
| | பல்வித | | 3,373,791.10 | 9,049,782.21 |
| | மீளச் செலுத்தப்படாத கேள்விப்பத்திர வைப்புப் பணம் | | 283,377.40 | 684,500.00 |
| | பதிவுப் புத்தகம் | | 5,137,100.00 | 4,652,800.00 |
| | பதிவுக் கட்டணம் | | 8,158,800.00 | 6,174,600.00 |
| | வாடகை வருமானம் | | - | 260,000.00 |
| | பூர்த்திசெய்யப்பட்ட பொருட்கள் | | 202,650.00 | 184,611.00 |
| | சேமிப்பு கணக்கு வட்டி | | 808,669.61 | 1,445,595.55 |
| | வழங்குநர்களை பதிவுசெய்தல் | | 7,000.00 | 75,500.00 |
| | | | **145,612,986.16** | **142,368,482.08** |

| நிதிக் கூற்றுக்கள் பற்றிய குறிப்பு | | | | |
|---|---|---|---|---|
| | | குறிப்பு | 2015 | 2014 |
| | | | ரூ. | ரூ. |
| **14** | **தயாரிப்பு பிரிவின் வருமானம்** | | | |
| | அஹுங்கம பதவியணி அபிவிருத்தி நிலையம் | | 1,931,075.50 | 318,162.00 |
| | உழைத்த 10% | | 664,095.70 | 781,807.00 |
| | ஹோட்டல் பாடசாலை- அஹுங்கம | | - | 5,500.00 |
| | பகுதிநேர பாடநெறி வருமானம் | | 9,688,681.47 | 10,309,987.47 |
| | அச்சக பாடசாலை- நாரஹேன்பிட்டி | | - | 537,125.75 |
| | முந்திய கற்கைகளுக்கான அங்கீகாரம் (RPL) | | 1,541,601.10 | 992,394.00 |
| | சிப்சல உணவகம்- நாரஹேன்பிட்டி | | 74,157.37 | 307,073.44 |
| | நானாவித வருமானம் | | 159,957.80 | 113,788.80 |
| | வர்த்தகப் பரிசோதனை | | 54,688.67 | 331,598.75 |
| | தலல்லா விடுதி | | 234,365.21 | |
| | T – சர்ட் வருமானம் | | 1,169,540.80 | |
| | வாகன சேர்விஸ் | | 55,327.00 | 44,513.00 |
| | தொ.ப.நி. உணவு தயாரிப்ப வருமானம் | | - | 119,945.00 |
| | | | **15,573,490.62** | **13,861,895.21** |

| நிதிக் கூற்றுக்கள் பற்றிய குறிப்பு | | | | |
|---|---|---|---|---|
| | | குறிப்பு | 2015 | 2014 |
| | | | ரூ. | ரூ. |
| **15** | **விசேட செயற்றிட்ட நிதியம்** | | | |
| | | | | - |
| | திறன் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சு- க.பொ.த.(உ.த.) மாணவர் நிகழ்ச்சித்திட்டம் | | 2,170,119.25 | 6,377,201.75 |
| | திறன் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சு- உலக திறன் தினம் | | 53,025.00 | 2,591,364.65 |
| | திறன் அபிவிருத்தி துறை செயற்றிட்டம் | | 114,270,351.26 | 66,331,150.49 |
| | இலங்கை மின்சாரஅ சபை | | 1,776,368.50 | |
| | TVEC | | - | 392,024.88 |
| | | | **118,269,864.01** | **75,691,741.77** |
| **16** | **பதவியணி ஆகுசெலவு** | | | |
| | ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.பொ.நி. | | 102,487,074.83 | 63,899,431.23 |
| | சேவைப் பணிக்கொடை மிகைப்பணம் | | 76,818.75 | 294,067.60 |
| | ஏனைய கொடுப்பனவு | | 433,998,896.67 | 232,938,543.56 |
| | ஓய்வூதிய பங்களிப்பு | | | 196,971.80 |
| | சம்பளம், மேலதிக நேரம் | | 381,472,962.66 | 374,942,155.06 |
| | பதவியணி சேவைப் பணிக்கொடை | | 99,277,549.20 | 57,963,426.32 |
| | | | **1,017,313,302.11** | **730,234,595.57** |

| நிதிக் கூற்றுக்கள் பற்றிய குறிப்பு | | | | |
|---|---|---|---|---|
| | | குறிப்பு | 2015 | 2014 |
| | | | ரூ. | ரூ. |
| 17 | **பிரயாண** | | | |
| | தங்குமிட செலவு | | 463,426.00 | 90,910.00 |
| | உள்நாட்டு | | 6,877,069.56 | 6,943,162.82 |
| | வெளிநாட்டு | | 4,473,001.30 | 4,469,131.17 |
| | தொகைமதிப்பீட்டுச் செலவு | | 284,147.96 | 1,940,030.00 |
| | | | **12,097,644.82** | **13,443,233.99** |
| 18 | **கொள்வனவு மற்றும் ஏனைய நுகர்வு** | | | |
| | எரிபொருள் மற்றும் எண்ணெய் | | 13,258,538.90 | 16,385,790.11 |
| | ஏனையவைகள் | | 1,673,172.20 | 3,691,306.53 |
| | காகிதாதிகளும் அலுவலக தேவைகளும் | | 8,935,643.40 | 12,306,446.88 |
| | | | **23,867,354.50** | **32,383,543.52** |
| 19 | **பராமரிப்பு** | | | |
| | கட்டங்கள் | | 12,013,289.13 | 9,709,395.04 |
| | இயந்திர உபகரனங்கள் | | 8,555,592.18 | 6,613,800.55 |
| | வாகனம் | | 11,884,404.68 | 11,436,979.45 |
| | | | **32,453,285.99** | **27,760,175.04** |
| 20 | **ஒப்பந்த சேவைகள்** | | | |
| | விளம்பரம் | | 2,322,323.70 | 6,054,591.36 |
| | கணக்காய்வுக் கட்டணம் | | 500,000.00 | 500,000.00 |
| | ஆலோசனை, தொழில்துறை கட்டணம் | | | 1,895,094.12 |
| | நட்டஈடு | | 313,794.00 | |
| | மின்சாரம் | | 44,753,916.95 | 48,912,656.75 |
| | வாடகை கட்டணம் | | 240,000.00 | 405,000.00 |
| | காப்புறுதி | | 4,579,745.90 | 3,750,432.00 |
| | சுத்தம்செய்யும் சேவை | | 9,554,281.82 | 7,848,685.02 |
| | பத்திரிகை, வாரசஞ்சிகை | | 397,978.00 | 409,561.00 |
| | தபால் கட்டணம் | | 891,524.76 | 1,154,151.26 |
| | வடகை. வரிப்பணம், வரி | | 6,701,835.26 | 5,539,059.61 |
| | பாதுகாப்புக் கட்டணம் | | 40,347,468.00 | 29,810,988.75 |
| | பதவியணி நலன்புரியும் எனைய | | 368,240.00 | 668,940.00 |
| | தொலைபேசிக் கட்டணம் | | 17,466,794.56 | 15,092,851.93 |
| | ஏற்றல் இறக்கல் | | 2,692,086.52 | 4,433,434.10 |
| | தண்ணீர் | | 9,401,925.60 | 9,241,015.62 |
| | | | **140,531,915.07** | **135,716,461.52** |

| நிதிக் கூற்றுக்கள் பற்றிய குறிப்பு | | | | |
|---|---|---|---|---|
| | | குறிப்பு | 2015 | 2014 |
| | | | ரூ. | ரூ. |
| **21** | **தொழிலில் அமர்த்தல், ஆராய்ச்சி மற்றும் தொழிற்முயற்சி** | | | |
| | பாடநெறிகள் அபிவிருத்தி | | 362,440.00 | 200,017.50 |
| | வேலையில் ஈடுபடுவர்களுக்கான பயிற்சி, மேற்பார்வை | | 13,988,608.40 | 11,394,054.50 |
| | ழில் முயற்சி நிகழ்சித்திட்டம் | | 936,144.80 | 935,279.89 |
| | தொழிலில் அமர்த்தல் | | 976,460.50 | 600,813.00 |
| | ய்ச்சி மற்றும் கற்கை | | 122,600.00 | 284,655.00 |
| | தியேக மக்கள் தொடர்பு | | 230,858.00 | 176,295.00 |
| | | | **16,617,111.70** | **13,591,114.89** |
| **22** | **ஏனைய செயற்பாட்டு செலவுகள்** | | | |
| | தெயட கிருல | | - | 3,019,567.00 |
| | விலைக்கழிவு 10 % | | 119,490.00 | 36,400.00 |
| | பயிற்சி பாடநெறிக்கான விலைக்கழிவு 50 % | | 2,077,110.00 | 1,497,255.00 |
| | பரீட்சையும் மதிப்பீடுகளும் | | 4,560,505.13 | 4,120,764.09 |
| | இலவச பாடநெறிச் செலவு | | 1,901,370.00 | 1,372,850.00 |
| | சிறப்பு | | 68,400.00 | 369,200.00 |
| | இலவச பாடநெறிக்கான காப்புறுதி | | 349,000.00 | 400,000.00 |
| | சட்டத்தரணி செலவு | | 713,508.23 | 1,244,566.00 |
| | பல்வித | | 4,153,020.47 | 9,217,775.61 |
| | தர முகாமைத்துவ அங்கீகாரம் | | 1,598,186.47 | 2,199,848.53 |
| | பருவச்சீட்டுக்கள் | | 4,513,405.00 | 5,407,931.24 |
| | விசேட பயிற்சி நிகழ்ச்சி | | 1,109,740.00 | 1,221,715.40 |
| | சம்பளக் கொடுப்பனவு | | 19,207,436.00 | 26,848,035.33 |
| | உபகரனங்களும் பாவனையும் | | 2,986,791.84 | 1,220,538.27 |
| | மாணவர்களிடம் இருந்து அறவிடப்படாத காப்புறுதி | | 305,700.00 | 566,000.00 |
| | செலுத்தி முடிக்காத பாடநெறிக் கட்டணம் | | 2,962,935.00 | 5,701,280.00 |
| | | | **46,626,598.14** | **64,443,726.47** |

| நிதிக் கூற்றுக்கள் பற்றிய குறிப்பு | | | | |
|---|---|---|---|---|
| | | குறிப்பு | **2015** | **2014** |
| | | | ரூ. | ரூ. |
| **23** | **விசேட செயற்றிட்டங்களுக்கான செலவு** | | | |
| | திறன் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சு- க.பொ.த(உ.த.) மாணவர் | | 2,170,119.25 | 6,377,201.75 |
| | திறன் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சு- உலக திறன் தினம் | | 53,025.00 | 2,591,364.65 |
| | திறன் துறை அபிவிருத்தி செயற்றிட்டம் | | 114,270,351.26 | 66,331,150.49 |
| | இலங்கை மின்சார சபை | | 1,776,368.50 | |
| | TVEC | | - | 392,024.88 |
| | | | **118,269,864.01** | **75,691,741.77** |
| **24** | **நிதி ஆகுசெலவு** | | | |
| | வங்கி கட்டணம் | | 185,196.91 | 184,948.02 |
| | | | **185,196.91** | **184,948.02** |

**நிதிக் கூற்றுக்கள் பற்றிய குறிப்பு**

**25.முந்திய வருட சரிசெய்தல்**

முந்திய வருடத்தின் சீர்செய்தல்களாக கீழ்க் காணும் அதிக மற்றும் குறைவான நிதியங்கள் சீர்செய்யப்பட்டுள்ளன.

| விபரம் | பற்று | வரவு | +/(-) |
|---|---|---|---|
| சேவைப் பணிக்கொடைக்கான நிதியம் | (352,844.00) | | (352,844.00) |
| செலுத்தப்படாத சம்பளங்களும் வேதனங்களும் | | 5,701,818.51 | 5,701,818.51 |
| மீளச் செலுத்தக்கூடிய கேள்விப்பத்திர வைப்பு | | 475,284.44 | 475,284.44 |
| வாகன சேர்விஸ் பிரிவு | (58,921.00) | | (58,921.00) |
| கையகப்படுத்திய அலுவலக உபகரனங்கள் | | 337,750.00 | 337,750.00 |
| கையகப்படுத்திய கட்டட உபகரனங்கள் | | 418,366.50 | 418,366.50 |
| தடுத்துவைக்கப்பட்ட பணம் | | 3,709,792.67 | 3,709,792.67 |
| வர்த்தக கடனாளிகள் | | 242,229.00 | 242,229.00 |
| ஏனைய செலுத்தப்பட வேண்டிய | | 1,000,000.00 | 1,000,000.00 |
| தேய்மானம் | (54,693.33) | 383,100.39 | 328,407.06 |
| நிறுத்தப்பட்ட வருமானம் மீளளிப்பு | (383,100.39) | 54,693.33 | (328,407.06) |
| விட்டுச் சென்ற | (1,693,525.00) | | (1,693,525.00) |
| மொத்தம் | **(2,543,083.72)** | **12,323,034.84** | **9,779,951.12** |

மேற்படி சரிசெய்தலின் பிரதிபலனாக 2014 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 86,236,803.12 குறைபாடு ரூபா 76,456,852.00 என 2015 இல் குறைக்கப்பட்டுள்ளது.

**26. அர்ப்பணிப்பு மற்றும் நிச்சயமற்ற செலவுகள்**

**அ) அதிகார சபைக்கு எதிரான சட்டநடவடிக்கைகள்**

நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் வழக்குகள் கீழே தரப்பட்டுள்ளது.

| நீதிமன்றம் | 31.12.2015 | 31.12.2014 |
|---|---|---|
| உச்ச நீதிமன்றம் | 02 | 03 |
| மேன்முறையீட்டு நீதிமன்றம் | - | - |
| மேல் நீதிமன்றம் | - | - |
| மாவட்ட நீதிமன்றம் | 01 | 02 |
| தொழில்நியாய சபை | 01 | 03 |
| தொழில் திணைக்கள விசாரணைகள் | 03 | - |
| மொத்தம் | **07** | **08** |

ஆ) **மூலதன அர்ப்பணிப்புக்கள்**

2015-12-31 ஆம் திகதிக்கு குறிப்பிடத்தக்க மூலதன அர்ப்பணங்கள் எதுவும் இல்லை.

**27. சொத்து இயந்திர உபகரனங்களுள் பாவனைக்குதவாத வற்றின் ஆகுசெலவு சீர்செய்தல்.**

2013, 2014 மற்றும் 2015 ஆண்டில் புரியப்பட்ட சொத்துக்கள் பற்றிய தொகைமதிப்பீட்டின் போது ஏல விற்பனையிலிட வேண்டிய பொருட்களிள் இனங்காணப்பட்டுள்ளதுடன் அந்த சில பொருட்கள் 2014 மற்றும் 2015ஆம் ஆண்டாகும் போது ஏல விற்பனையில் மற்றும் அழிக்கப்பட்டுள்ளது. அந்த பொருட்களின் புத்தகப் பெருமதி 2016 ஆண்டில் சொத்து இயந்திர உபகரனங்கள் (நிலையான சொத்துக்கள்) கணக்கிற்கு சீர்செய்யப்பட்டுள்ளது.

**28. கிடைக்கப்பெறாத கடனுக்கான நிதியம்**

கிடைக்கப்பெறாத கடனுக்கான நிதியமாக ரூபா 6,966,641.40 தொகையில் இருந்து ரூபா 6,775,037.37 தொகை இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சினால் பாதுகாப்பு சேவைகள் சம்பந்தமான கிடைக்கப்பெற வேண்டியுள்ளதுடன் அது சம்பந்தமான தீர்மானம் உரிய காலத்தில் எடுக்கப்படும்.

**29. செலுத்தப்பட வேண்டிய TVEC செயற்றிட்ட நிதியம்**

2014 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியாகும் போது TVEC செயற்றிட்டத்தின் மீதி ரூபா 10,427,341.81 பாடநெறிகளுக்காக வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது குறித்த பாடநெறிகளின் உபகரனங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. ஆகவே அந்த உபகரனங்கள் 2016 ஆண்டில் சரிசெய்யப்படும்.

| இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபை | | |
|---|---|---|
| 2015 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி பரிசீலனை | | |
| **விபரம்** | **பற்று** | **வரவு** |
| | | |
| **மூலதனச் சொத்து கையகப்படுத்தல்** | | |
| காணி மேம்படுத்தல் மற்றும் காணி கையகப்படுத்தல் | 1,753,908,921.24 | |
| கட்டடம் மற்றும் மேம்படுத்தல் கையகப்படுத்தல் | 3,142,245,626.52 | |
| கணினி உபகரனங்கள் கையகப்படுத்தல் | 405,795,527.38 | |
| மின் உபகரனங்கள் கையகப்படுத்தல் | 8,644,825.81 | |
| தளபாடங்களும் பொறுத்துதல் கையகப்படுத்தல் | 257,794,321.28 | |
| மோட்டார் வாகன கையகப்படுத்தல் | 292,781,740.58 | |
| அலுவலக உபகரனங்கள் கையகப்படுத்தல் | 90,871,020.64 | |
| இயந்திர உபகரனங்கள் கையகப்படுத்தல் | 85,464,051.81 | |
| பயிற்சி உபகரனங்கள் கையகப்படுத்தல் | 1,779,723,992.39 | |
| **தேய்மானத்திற்கான நிதியம்** | | |
| கட்டடம் மற்றும் மேம்படுத்தலுக்கான தேய்மானம் | | 824,598,506.20 |
| கணிணி உபகரனங்களுக்காகன தேய்மானம் | | 266,565,686.69 |
| மின் உபகரனங்களுக்கான தேய்மானம் | | 4,624,200.59 |
| தளபாடங்களும் பொறுத்துதல் தேய்மானம் | | 102,234,957.95 |
| மோட்டார் வாகன தேய்மானம் | | 211,752,455.92 |
| அலுவலக உபகரனங்களுக்கான தேய்மானம் | | 37,646,450.32 |
| இயந்திர உபகரனங்களுக்கான தேய்மானம் | | 59,161,919.29 |
| பயிற்சி உபகரனங்களுக்கான தேய்மானம் | | 1,052,338,817.21 |
| **பிரதான வேலைகளின முன்னேற்றம** | | |
| பிரதான வேலைகளின் முன்னேற்றம்- கட்டட கட்டமைப்பு | 128,920,347.07 | |
| **முதலீடு** | | |
| நிலையான வைப்பீடு | 25,000.00 | |
| **பொருட்கள் தொகை** | | |
| பயிற்சி பொருட்கள் | 22,353,518.82 | |
| காகிதாதிகள் | 7,149,429.29 | |
| ஏனைய நுகர்வு | 823,384.20 | |
| **ஏனைய கிடைக்கப்பட வேண்டிய** | | |
| நிகழ்சிக்களுக்கான முற்பணம் | 82,000.00 | |
| வைப்பீடு | 409,750.00 | |
| திறன் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சு | 3,930,931.24 | |
| கிடைக்க வேண்டிய வாகன சேர்விஸ் வருமானம் | 519,749.00 | |
| கிடைக்க வேண்டிய பாடநெறிக் கட்டணம் | 14,683,894.10 | |
| கிடைக்க வேண்டிய சம்பளம் | 1,173,934.93 | |
| நிரை வருமானம் | 11,732.00 | |
| அரச அமைப்புக்கள் | 3,035,710.16 | |
| வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்க வேண்டிய | 10,977,338.20 | |
| கிடைக்காத கடனுக்கான நிதியம் | | 6,966,641.40 |
| பதவியணி கடன் | | |
| இடர் கடன் | 44,905,743.66 | |

| | | |
|---|---|---|
| விழா முற்பணம் | 458,000.00 | |
| **பணம் மற்றும் பணத்திற்கு சமமான** | | |
| தங்க நாணயக் குற்றிகள் | 104,000.00 | |
| **வங்கிக் கணக்குகள்** | | |
| அம்பாறை | 515,927.94 | |
| அனுராதபுரம் | 328,913.71 | |
| பதுளை | 155,790.73 | |
| மட்டக்களப்பு | 610,125.07 | |
| கொழும்பு | 972,503.72 | |
| காலி | 650,159.86 | |
| கம்பஹா | 46,299.86 | |
| அம்பாந்தோட்டை | 87,430.38 | |
| தலைமையகம் | 74,133,854.40 | |
| யாழ்ப்பாணம் | 283,833.25 | |
| களுத்துறை | 189,384.92 | |
| கண்டி | 849,038.30 | |
| கேகாளை | 69,213.70 | |
| கிளிநொச்சி | 521,628.13 | |
| குருநாகல் | 2,058,307.45 | |
| மாத்தளை | 303,303.27 | |
| மாத்தறை | 553,434.76 | |
| மொனராகளை | 1,093,513.08 | |
| நுவரெலியா | 1,011,564.63 | |
| NVTI – பத்தேகம | 296,535.96 | |
| NVTI –மிரிஜ்ஜிவில | 984,624.36 | |
| NVTI – நாரஹேன்பிட | 1,154,086.30 | |
| NVTI - நியகம | 149,922.99 | |
| NVTI – ஓருகொடவத்த | 99,992.52 | |
| NVTI - இரத்மலானை | 695,178.92 | |
| NVTI – தலல்ல | 447,629.16 | |
| பொலொன்னறுவை | 616,784.43 | |
| புத்தளம் | 96,837.77 | |
| இரத்னபரி | 108,572.30 | |
| திருகோணமலை | 151,933.70 | |
| வவுனியா | 1,369,360.46 | |
| கையிருப்பு பணம் | 27,313.00 | |
| அரச மூலதன வழங்கல் | | 36,138,943.05 |
| அரச வழங்கல்- மீளளிப்பு | | 1,162,000,000.00 |
| நிறுத்திவைக்கப்பட்ட வருமானம் வழங்கல்- மீளளிப்பு | | 396,423,846.71 |
| ஒதுக்கிய மற்றும் மேலதிகம் | | |
| நிறுத்திவைக்கப்பட்ட வழங்கல் | | 3,492,008,442.35 |
| சேவைப்பணிக்கொடைக்கான நிதியம் | | 373,823,908.00 |
| மீள் மதிப்பீடு மேலதிகம் | | 2,319,991,544.97 |
| **செலுத்தப்பட வேண்டிய** | | |
| கணக்காய்வுக்காக செலுத்தப்பட வேண்டிய | | 1,924,000.00 |
| காசாளர் வைப்புப் பணம் | | 25,000.00 |
| செலுத்த வேண்டிய பாடநெறிக் கட்டணம் | | 451,740.00 |
| வைப்புப் பணம் | | 67,000.00 |

| | | |
|---|---|---|
| செலுத்த வேண்டிய ஊ.சே.நி. | | 14,175,314.95 |
| செலுத்த வேண்டிய ஊ.ந.பொ.நி. | | 2,126,296.84 |
| செலுத்த வேண்டிய விரிவுரைக் கட்டணம் | | 1,794,325.00 |
| ஏனைய செலுத்த வேண்டிய | | 7,170,060.80 |
| செலுத்த வேண்டிய செயற்றிட்ட நிதியம் | | 10,427,341.81 |
| கிடைக்கப்பட்ட முற்பணம் | | 646,095.00 |
| மீளச்செலுத்தும் கேள்விப்பத்திர வைப்புப் பணம் | | 1,888,531.29 |
| தடுத்துவைக்கப்பட்ட பணம் | | 15,473,297.26 |
| செலுத்த வேண்டிய சம்பளம் | | 449,003.43 |
| செலுத்த வேண்டிய பதவியணி ஊக்குவிப்பு | | 251,903.65 |
| வர்த்தக கடனாளிகள் | | 7,639,520.77 |
| செலுத்த வேண்டிய வி.அ.த. பங்களிப்பு | | 96,207.76 |
| செலுத்த வேண்டிய மாணவர் காப்புறுதி | | 24,905,500.00 |
| கையடக்கத் தொலைபேசி | | 1,264,640.15 |
| **திரண்ட செலவு** | | |
| திரண்ட வழிகாட்டல் ஆலோசனைக் கட்டணம் | | 183,020.00 |
| திரண்ட மின்சாரக் கட்டணம் | | 2,317,337.56 |
| திரண்ட பரீட்சைம் ற்றும் மதிப்பிடக் கட்டணம் | | 207,482.00 |
| திரண்ட எரிபொருள் மற்றும் எண்ணெய் | | 48,948.00 |
| திரண்ட சுத்தம் செய்யும் சேவைகள் | | 717,379.00 |
| திரண்ட பராமரிப்பு | | 1,414,185.50 |
| திரண்ட பத்திரகிக்கை மற்றும் வாரசஞ்சிகை | | 35,825.00 |
| திரண்ட மேலதிக நேரம் மற்றம் தினக்கொடுப்பனவு | | 863,678.49 |
| திரண்ட பகுதி நேரம் செலவு | | 4,852,415.00 |
| திரண்ட மேம்படுத்தல் செலவு | | 495,554.56 |
| திரண்ட வாடகை, வரிப்பணம் மற்றும் வரி செலவு | | 213,900.00 |
| திரண்ட பருவச்சீட்டு | | 545,083.75 |
| திரண்ட பாதுகாப்புக் கட்டணம் | | 4,046,400.00 |
| திரண்ட நிறுத்திவைக்கப்பட்ட கொடுப்பனவு | | 1,535,500.00 |
| திரண்ட தொலைபேசிக் கட்டணம் | | 1,887,616.47 |
| திரண்ட பிரயாணக் கட்டணம் | | 550,308.80 |
| திரண்ட எற்றியிறக்கல் செலவு | | 77,800.00 |
| திரண்ட தண்ணீர் கட்டணம் | | 459,083.55 |
| திரண்ட தொழில் பயிற்சி செலவு | | 536,250.00 |
| **ஏனைய வருமானம்** | | |
| ஏலவிற்பனை வருமானம் | | 415,250.00 |
| பாடநெறிக் கட்டணம் | | 119,485,750.00 |
| நாளாந்த குறிப்பு | | 2,951,000.00 |
| தொழில் முயற்சி நிகழ்ச்சிகள் | | 82,000.00 |
| தண்டப் பணம் | | 69,956.00 |
| பூர்த்தியான பொருட்கள் விற்பனை | | 202,650.00 |
| மண்டப வருமானம் | | 1,590,800.00 |
| தங்குமிட கட்டணம் | | 414,500.00 |
| கதிர்காமம் விடுமுறை விடுதி | | 446,275.00 |
| கடன் வட்டி | | 1,857,567.05 |
| நானாவித வருமானம் | | 3,373,791.10 |
| மீளச் செலுத்தப்படாத கேள்விப்பத்திர வைப்பு | | 283,377.40 |
| பதிவுப் புத்தகம் | | 5,137,100.00 |

| | | |
|---|---|---|
| பதிவுசெய்யும் கட்டணம் | | 8,158,800.00 |
| உணவகம் வருமானம் | | 220,000.00 |
| வுழுங்கல் பதிவுசெய்தல் | | 7,000.00 |
| சேமிப்பு கணக்கு வட்டி | | 808,669.61 |
| கம்பனி பதிவுசெய்தல் | | 108,500.00 |
| **உற்பத்தி பிரிவு வருமானம்** | | |
| நானாவித வருமானம் | | 159,957.80 |
| பகுதிநேர பாடநெறிகள் | | 9,688,681.47 |
| RPL | | 1,541,601.10 |
| வர்த்தகப் பரிசோதனை | | 54,688.67 |
| வாகன சேர்விஸ் | | 55,327.00 |
| அஹுங்கம் கல்விசார் பதவியணி அபிவிருத்தி | | 1,931,075.50 |
| 10% உழைப்பு | | 664,095.70 |
| சிப்சல பொஜுன் நாரஹேன்பிட்டிய | | 74,157.37 |
| தலல்லா தங்குமிடம் | | 234,365.21 |
| T –சர்ட் வருமானம் | | 1,169,540.80 |
| **விசேட செயற்றிட்டங்களுக்கான நிதியம்** | | |
| உயர் தரம் மாணவர்களுக்காக அமைச்சினால் கிடைக்கப்பட்ட நிதியம் | | 2,170,119.25 |
| இலங்கை மின்சார சபையினால் மின்சாரத்திற்காக கிடைக்கப்பட்ட நிதியம் | | 1,776,368.50 |
| செயறற்றிட்ட நிதியத்திற்காக SSDP இனால் கிடைக்கப்பட்ட | | 114,270,351.26 |
| உலக திறன் நாள் செலவு | | 53,025.00 |
| **பதவியணி செலவு** | | |
| ஊ.சே.நி. செலவு | 81,981,803.90 | |
| ஊ.ந.பொ.நி. செலவு | 20,505,270.93 | |
| ஏனைய கொடுப்பனவு (பதவியணி செலவு) | 433,998,896.67 | |
| சம்பளங்கள் மற்றும் மேலதிக நேரம் | 381,472,962.66 | |
| பதவியணி சேவைப் பணிக்கொடை | 99,277,549.20 | |
| சேவைப் பணிக்கொடைக்கான மிகைக்கட்டணம் | 76,818.75 | |
| **பிரயாணங்கள்** | | |
| பிரயாணங்கள- உள்நாட்டு | 6,877,069.56 | |
| பிரயாணங்கள- வெளிநாடு | 4,473,001.30 | |
| தங்கும்வசதி செலவுகள் | 463,426.00 | |
| தொகைமதிப்பீடு செலவுகள் | 284,147.96 | |
| **வழுங்கல் மற்றும் நுகர்வு** | | |
| காகிதாதிகள் மற்றும் அலுவலக தேவைகள் | 8,935,643.40 | |
| எரிபொருள் மற்றும் எண்ணெய்க் கட்டணங்கள் | 13,258,538.90 | |
| ஏனைய வழங்கல் | 1,673,172.20 | |
| **பராமரிப்பு** | | |
| வாகன பராமரிப்பு | 11,884,404.68 | |
| இயந்திர உபகரனங்கள் பராமரிப்பு | 8,555,592.18 | |
| கட்டடப் பராமரிப்பு | 12,013,289.13 | |
| **ஒப்பந்த சேவைகள்** | | |
| கணக்காய்வுக் கட்டணம் - 1 | 500,000.00 | |
| விளம்பரம் -1407C | 2,322,323.70 | |
| நட்டஈடு | 313,794.00 | |
| மின்சாரக் கட்டணம் | 44,753,916.95 | |

| | | |
|---|---|---|
| வாடகை கட்டணம் | 240,000.00 | |
| காப்புறுதி | 4,579,745.90 | |
| சுத்தம் செய்யும் சேவை | 9,554,281.82 | |
| பத்திரிக்கை மற்றும் பருவ சஞ்சிகை -1 | 397,978.00 | |
| தபால் கட்டணம் | 891,524.76 | |
| வாடகை, வரிப்பணம் மற்றும் வரி | 6,701,835.26 | |
| பாதுகாப்புக் கட்டணம்-1 | 40,347,468.00 | |
| ஊழியர் நலன்புரி மற்றும் ஏனைய | 368,240.00 | |
| தொலைபேசிக் கட்டணம் | 17,466,794.56 | |
| போக்குவரத்து- 1 | 2,692,086.52 | |
| தண்ணீர் கட்டணம் | 9,401,925.60 | |
| **தொழிலில் அமர்த்தல்,ஆராய்ச்சி, தொழிற்முயற்சி** | | |
| துறைசார்ந்த அபிவிருத்தி | 362,440.00 | |
| தொழிலில் உள்ளவர்களுக்கான பயிற்சியும் மேற்பார்வையும் | 13,988,608.40 | |
| தொழிற்முயற்சி நிகழ்ச்சிகள் | 936,144.80 | |
| வேலையில் அமர்த்தல் 1 | 976,460.50 | |
| ஆராய்ச்சி மற்றும் கற்கை | 122,600.00 | |
| தனியார் அரச கூட்டு | 230,858.00 | |
| **ஏனைய தொழிற்பாட்டு செலவுகள்** | | |
| கருவிகளும் நுகர்வும் | 2,986,791.84 | |
| மொத்த விலகிய எண்ணிக்கை 2015 முழுநேர | 2,962,935.00 | |
| பரீட்சை மற்றும் மதிப்பீடு -1 | 4,560,505.13 | |
| கௌரவிப்பு | 68,400.00 | |
| சட்டக் கட்டணம் | 713,508.23 | |
| பல்வித செலவுகள் | 4,153,020.47 | |
| தர முகாமைத்துவம், அங்கீகாரம் | 1,598,186.47 | |
| பருவச்சீட்டுக்கள் | 4,513,405.00 | |
| விசேட பயிற்சி நிகழ்ச்சி | 1,109,740.00 | |
| தடுத்துவைக்கப்பட்ட கொடுப்பனவு | 19,207,436.00 | |
| இலவச பாடடிநறி | 1,901,370.00 | |
| 10% கழிவு | 119,490.00 | |
| 50 % கழிவு விசேட செயற்றிட்டம் | 2,077,110.00 | |
| பாடநெறிக்கான அலவச காப்புறுதி | 349,000.00 | |
| மீளப்பெறப்படாத காப்புறுதி | 305,700.00 | |
| **விசேட செயற்றிட்டங்களுக்கான செலவு** | | |
| அமைச்சின் உ.த. மாணவர்களுக்கான செலவு | 2,170,119.25 | |
| இ.மி.சபையினால் மின்சாரத்திற்கான செலவு | 1,776,368.50 | |
| SSDP செயற்றிட்டத்திற்காக கிடைத்த செலவு | 114,270,351.26 | |
| உலக திறன் தினத்திற்கான செலவு | 53,025.00 | |
| **நிதி ஆகுசெலவு** | | |
| வங்கிக் கட்டணம் | 185,196.91 | |
| பயிற்சிப் பொருட்கள் 1 | 82,089,003.86 | |
| பதவியணி பயிற்சி - கொள்ளளவு அபிவிருத்தி | 5,862,719.00 | |
| விளம்பரச் செலவு | 18,386,522.07 | |
| தொழில்வழிகாட்டி -1 | 2,488,071.43 | |
| தேய்வுமானம் | 396,423,846.71 | |
| இலாப நட்டக் கணக்கு | 686,636,233.28 | |
| முந்திய வருடத்தின் சரிசெய்தல் | | 9,779,951.12 |
| | **10,747,276,158.95** | **10,747,276,158.95** |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல.
My No. வீரீவை/ஈ/வீரீஏ/1/15/108

මබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 2017 மார்ச் 23

தலைவர்,
இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை.

**இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1995 இன் 12 ஆம் இலக்க இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 25 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை அதிகாரசபையின் தலைவருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

1.2 **நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16

(i) சொத்தொன்று பயன்பாட்டிற்காக தயார்படுத்தப்பட்ட நிலைக்கு உட்பட்டதன் பின்னர் அதன் பெறுமானத்தேய்வு ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதிகாரசபையினால் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டை அடிப்படையாகக் கொண்டு பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது.

(ii) நியமத்தின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் இழிவுப் பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலம் என்பவற்றைப் போல பெறுமானத்தேய்வும் ஒவ்வொரு வருட இறுதியிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் அதனைக் கவனத்தில் கொள்ளாது அதிகாரசபையினால் ஒவ்வொரு சொத்துத் தொகுதிக்காகவும் பொது விகிதம் பயன்படுத்தப்பட்டு சொத்துக்கள் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) 2009 ஆம் ஆண்டின் பின்னர் சொத்துக்களை அகற்றல் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 7,170,061 பெறுமதியான ஏனைய செலுத்த வேண்டியவைகள் தொடர்பாக கடன்கொடுத்தோர் பட்டோலை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 34,825,040 கடன்பட்டோர் மீதியில் ரூபா 3,177,689 தொகையான 07 மீதிகள் 1 முதல் 5 வருடங்கள் வரையான காலத்தினையும், ரூபா 7,068,641 தொகையான 21 கடன்பட்டோர் மீதிகள் 05 முதல் 13 வருடங்கள் வரையிலான காலத்தையும் விஞ்சியிருந்தன. இதில் ரூபா 3,035,710 அரசாங்க நிறுவனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 90,775,779 ஆக இருந்ததுடன் அவற்றுள் ரூபா 265,000 தொகை 05 வருடங்களுக்கு மேலாகாகவும், ரூபா 13,313,061 தொகை 03 முதல் 05 வருடங்கள் வரையான காலமும் ரூபா 19,969,169 தொகை 01 முதல் 03 வருடங்கள் வரையான காலப்பகுதியினையும் கடந்திருந்த போதிலும் அவற்றைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை | |
| IX ஆம் அத்தியாயத்தின் 2.2 | நிறுவனத்தின் நிரந்தர விரிவுரையாளர் பதவியணியினால் மேற்கொள்ளப்படுகின்ற பகுதிநேர |

| | |
|---|---|
| ஆம் பிரிவு | பயிற்சி பாடநெறிகளுக்கான விரிவுரிரைகளுக்காக வழங்கப்பட்ட ரூபா 168,835 தொகையான கொடுப்பனவுகளிலிருந்து 10 சதவீத அரசிறை கழிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை

---

| | |
|---|---|
| (i) நிதிப்பிரமாணம் 104 மற்றும் 110 | இரத்மலானை தேசிய தொழிற்பயிற்சி நிலையத்தின் கணனி மென்பொருள் பாடநெறிக்குரிய 2 கணனி இயந்திரங்கள் 2015 சனவரி 15 ஆந் திகதி தொலைந்து போயிருந்ததுடன் அது தொடர்பில் உரிய பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 188(2) | 2009 ஆம் ஆண்டில் வைப்புச் செய்யப்பட்டிருந்த போதும் தேறாதிருந்த ரூபா 49,644 தொகையான 2 காசோலைகள் மற்றும் 2013 ஆம் ஆண்டில் வைப்புச் செய்யப்பட்டிருந்தும் கணக்கில் செலவு வைக்கப்படாதிருந்த ரூபா 320,915 தொகையான பண வைப்புக்கள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 385 | வங்கிக் கணக்கொன்றிலிருந்து ரூபா 500 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையொன்றைச் செலுத்தும் போது அது காசாகச் செலுத்த முடியாதிருந்த போதும் 8 சந்தர்ப்பங்களின் போது ரூபா 86,400 வரையான பகுதிநேர பாடநெறி விரிவுரையாளர் கட்டணங்கள் காசாகச் செலுத்தப்பட்டிருந்தமை தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. |

| | |
|---|---|
| (இ) 2003 யூன் 02 ஆந் திகதிய | ஏதாவதொரு காரணத்தின் அடிப்படையில் பதில் |

| | |
|---|---|
| பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1(vii) ஆம் பிரிவு | கடமை நியமனம் வழங்கப்படுமானால் 03 மாதங்களை விஞ்ச முடியாதிருந்த போதிலும் அதற்கு முரணாக 04 வருடங்கள் வரை பதில் கடமை நியமனங்கள் வழங்கப்பட்ட 04 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |

## 2.5 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முறையான அங்கீகாரமின்றி தேசிய தொழிற்பயிற்சி நிலையமொன்றில் 2015 மார்ச் 11 முதல் பகுதிநேர பயிற்சி பாடநெறியொன்று நடாத்தப்பட்டிருந்ததுடன் பயிலுனர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட ரூபா 42,700 தொகையை 04 மாதங்கள் கடந்தும் காசாளருக்குக் கையளிக்கப்படாது விரிவுரையாளர்களின் பொறுப்பில் விடப்பட்டிருந்தது.

(ஆ) 2011 ஆம் ஆண்டின் போது உலக சுற்றுலா தினத்தை கொண்டாடுவதற்காக செலசினே நிறுவனத்திற்குச் செலுத்துவதற்காக 2012 பெப்ரவரி மாதத்தின் போது ரூபா 7,500,000 தொகை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி நிறுவனத்திலிருந்து கிடைத்திருந்தது. அதில் கொடுப்பனவுகளைச் செய்ததன் பின்னர் சேமிக்கப்பட்ட ரூபா 1,000,000 முறையான அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின்போது அதிகாரசபையின் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது.

(இ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவின் பிரகாரம் திறைசேரியின் அங்கீகாரமின்றி அதிகாரசபையின் பயிலுனர்களுக்காக காப்புறுதி நிதியமொன்றை தாபிப்பதற்காக பயிலுனர்களிடமிருந்து 2013 ஆம் ஆண்டு முதல் 2015 திசெம்பர் 31 வரை ரூபா 24,905,500 சேகரிக்கப்பட்டு அதிகாரசபையின் வங்கிக் கணக்கொன்றில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

# 3. நிதி மீளாய்வு

## 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 75,332,248 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின்

பற்றாக்குறை ரூபா 76,456,852 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதிவிளைவுகளில் ரூபா 1,124,604 அதிகரிப்பொன்று ஏற்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது பதவியணியினர் கிரயம் ரூபா 287,078,707 இனாலும், உடன்படிக்கை செய்யப்பட்ட சேவைச் செலவினம் ரூபா 4,815,454 இனாலும், பாதுகாப்புச் சேவைச் செலவினம் ரூபா 10,536,480 இனாலும் அதிகரித்திருந்த போதிலும் வழங்கல் மற்றும் நுகர்வோர் சேவைகள் ரூபா 8,514,189 இனாலும் ஏனைய செயற்பாட்டுச் செலவினம் ரூபா 17,817,128 இனாலும் குறைவடைந்தமை மற்றும் திறைசேரி நிதிஏற்பாடு ரூபா 236,753,539 இனால் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட அதிகரிப்பு தொடர்பில் பிரதானமாகத் தாக்கமளித்திலிருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 4 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டின் போது நிதி மிகையும் ஏனைய ஆண்டுகளில் பற்றாக்குறையும் ஏற்பட்டிருந்தன. எவ்வாறாயினும் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கவனத்தில் கொள்ளும் போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 1,023,595,450 தொகையான நிறுவனத்தின் பங்களிப்பு மீளாய்வாண்டின் போது ரூபா 1,338,404,900 வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது.

### 3.2 நிறுவனத்திற்கு எதிராகவும் நிறுவனத்தினாலும் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான விடயங்கள்

மீளாய்வாண்டின் இறுதியில் ஊழியர்களினால் நிறுவனத்திற்கு எதிராக 07 வழக்குகளும், சேவையை கைவிட்டுச் சென்ற பணிப்பாளருக்கு (நிதி) எதிராக நிறுவனத்தினால் 02 வழக்குகளும் தொடரப்பட்டிருந்ததுடன் ஆண்டின் போது ரூபா 713,508 தொகை சட்டச் செலவினமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) (i) 1995 இன் 12 ஆம் இலக்க இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துதல் மற்றும் பயிற்சியொன்றை வழங்குதல், தொழிற்பயிற்சி மற்றும் ஊழியச் சந்தை தொடர்பான ஆராய்ச்சிகளை நடாத்துதலும்

அபிவிருத்தி செய்தலும், அரசாங்க மற்றும் தனியார் துறையின் தொழிற்பயிற்சி நடவடிக்கைளை தொடர்புபடுத்துதல், வழிகாட்டியும் ஆலோசனையும், வேலைக்கமர்த்தல், தேசிய மற்றும் சர்வதேச பயிற்சி அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்களுடன் தொடர்புகளைப் பேணிக் கொள்ளல் மற்றும் தொழிற்பயிற்சிக்காக தேவையான பயிற்சியாளர்களைப் பயிற்றுவித்தல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அதிகாரசபையினால் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது ஊழியச் சந்தையின் தேவை மற்றும் வழங்கல்கள் தொடர்பான ஆராய்ச்சிகள் நடாத்தப்படாதிருந்ததுடன் சர்வதேச தொடர்புகளைப் பேணிச் செல்வதற்காகவும் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் ஊழியச் சந்தையில் தேவை காணப்படுகின்ற துறைகளின் பிரகாரம் இனங்காணப்பட்ட பாடநெறிகளுக்காக பயிலுனர்களைக் கவர்வதற்காகவும் பயிற்சியளிப்பதற்காகவும் பொருத்தமான நிகழ்ச்சித்திட்டம் அதிகாரசபையினால் அமுல்படுத்தப்படாதிருந்ததுடன் அப்பாடநெறிக்காக பயிலுனர்களின் பங்குபற்றல் விதம் கீழ் மட்டத்தில் காணப்பட்டது.

(ii) குளிரூட்டி மற்றும் காற்று சமநிலையாக்கிகளை பழுதுபார்த்தல், இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள், உணவுத் தொழில்நுட்பம் தோற்பொருட்களும் பாதணிகளும், கடற்றொழிலும் வர்ண மீன்கள் மற்றும் அச்சிடல் போன்ற தொழில்சார் துறைகளில் மீளாய்வாண்டின் போது பயிற்சியளிக்கப்பட்டிருந்த பயிலுனர்களின் எண்ணிக்கை ஒட்டுமொத்த எண்ணிக்கையில் 5 சதவீதத்திற்கு குறைவாக இருந்தது.

(ஆ) கடந்த 3 வருடங்களில் பாடநெறிகளை நடாத்துதல் மற்றும் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) 2013 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை முறையே 28446, 28692 மற்றும் 28745 பயிலுனர்கள் பயிற்சிக்காக சேர்க்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் பயிலுனர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஒரு சதவீதத்தைவிட குறைவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. நடாத்தப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை 1925, 1939 மற்றும் 1952 ஆனமையால் அந்த

ஆண்டுகளின் போது பாடநெறிகளின் அதிகரிப்பும் ஒரு சதவீதத்தைவிட குறைவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) தொழிற் தகைமை மட்டத்திற்காக (NVQ) தரப்படுத்தப்படாத பாடநெறிகளின் எண்ணிக்கை 2013 ஆம் ஆண்டின் போது 522 முதல் 2015 இன் போது 198 வரை குறைக்கப்பட்டிருந்ததுடன் தொழிற்திறனின் 4 ஆம் மட்ட பாடநெறிகள் 2013 இன் போது 383 முதல் 775 வரை அதிகரித்திருந்தமை நல்லதொரு முன்னேற்றமாக இருந்தது.

(iii) 2015 ஆம் ஆண்டிற்காக 2405 முழுநேர மற்றும் பகுதிநேர பாடநெறிகளை நடாத்துவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், 1952 பாடநெறிகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் 453 பாடநெறிகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) பயிலுனர்களின் எண்ணிக்கை 5 மற்றும் அதற்குக் குறைவாக சேர்க்கப்பட்டிருந்த பாடநெறிகளின் எண்ணிக்கை 28 ஆகும்.

(இ) திறன்சார்ந்த அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழுள்ள செயற்பாடுகளின் செயலாற்றல்.

(i) மீளாய்வாண்டின் இறுதிவரையில் 60 பயிற்சி நிலையங்களில் 60 வியாபார அலகுகளை (Business Unit) ஆரம்பிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், 07 நிலையங்களில் மாத்திரம் நடவடிக்கை எடுத்து ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

(ii) திறன்சார்ந்த அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் 2015 திசெம்பர் 31 வரையில் ஆட்சேர்க்கப்பட வேண்டிய பதவியணியினர் 167 ஆக இருக்க வேண்டிய போதிலும் 43 உத்தியோகத்தர்கள் மாத்திரம் சேர்க்கப்பட்டமையின் காரணமாக அடையப்படாத இலக்கு 75 சதவீதமாகும். ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 25 விரிவுரையாளர்களுக்கிடையே 11 பேர் நிறுவனத்திலிருந்து விலகிச் சென்றிருந்ததுடன், மேலும் 7 விரிவுரையாளர்கள் இலக்கிடப்பட்ட நிலையங்களில் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், சேவைக்கு இணைக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) செயற்திட்ட திட்டமிடலின் கீழான ஆட்சேர்ப்புகளுக்கு மேலதிகமாக 2015 ஆம் ஆண்டில் அதிகாரசபையினால் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 43 விரிவுரையாளர்களுக்காக பாதீட்டு நிதிஏற்பாடு ஒதுக்கப்படாமையினால் 2015 ஆம் ஆண்டில் அந்த உத்தியோகத்தர்களின் சம்பளத்திற்காக ரூபா 13,147,737 தொகை செயற்திட்டத்தின் மூலம் செலுத்தப்பட்டிருந்தது.

(iv) செயற்திட்டத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்ட 07 நிலையங்களில் 40 புதிய பாடநெறிகளை ஆரம்பிப்பதற்கும் அந்த பாடநெறிகளுக்காக தேவையான சகல உபகரணங்களை வழங்குவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், 2015 திசெம்பர் 31 வரையும் இதில் 26 பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) அதிகாரசபையில் காணப்படுகின்ற முகாமைத்துவ தகவல் முறைமையின் மீளாய்வு மற்றும் அபிவிருத்தி பயிலுனர்களின் பதிவு, நிதி, களஞ்சியம் நிர்வாக மற்றும் நூலக நடவடிக்கைகளை முறையாக வெளிப்படுத்தும் வகையில் கணனி வலைப்பின்னலொன்றை ஸ்தாபித்தல் நோக்கமாக இருந்த போதிலும் அவ்வாறான தகவல் முறைமையொன்றை தயாரிக்கும் நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) செயற்திட்டத்தின் நோக்கமான வெளிநாட்டு வேலைவாய்ப்பை இலக்காகக் கொண்டு புதிய பயிற்சி பாடநெறிகளை அபிவிருத்தி செய்வதற்காக அதிகாரசபையினால் மீளாய்வாண்டின்போது வேலைத் திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(vii) செயற்திட்டத்தின் திட்டப் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் 10 புதிய பயிற்சி நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் ஒரு நிலையத்தின் நிர்மாணம் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய 50 நிலையங்களில் 12 நிலையங்கள் மாத்திரம் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தன.

(viii) தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டதன் பிரகாரம் கொழும்பில் அமைந்துள்ள தேசிய நிலையமொன்றில் முழுநேர

மோட்டார் வாகன மின்னியல் பயிலுனர் பாடநெறியின் 2012 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் குழுக்களுக்கு பயிலுனர் சான்றிதழ் பத்திரங்கள் 2016 ஒக்தோபர் 26 ஆந் திகதி வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1995 இன் 12 ஆம் இலக்க இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 15(1) ஆம் பிரிவின் மூலம் தொழிற்பயிற்சி சபையை தாபித்தல் தொடர்பாக குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் 1996 ஏப்ல் 30 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியில் தொழிற்பயிற்சி சபை தாபித்தலுக்குரிய கட்டளை வழங்கப்பட்டிருந்த போதிலும், 2015 திசெம்பர் 31 வரையும் அவ்வாறான சபை தாபிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பாடநெறியை ஆரம்பித்தலும் நிறுத்தலும் முறையான அடிப்படையின்றி மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் செயற்பாட்டிலுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை முறையே 275 மற்றும் 251 ஆக இருந்ததுடன் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அந்த எண்ணிக்கை 247 வரை குறைவடைந்திருந்தது.

(ஊ) புத்தளம் மாவட்ட தொழிற்பயிற்சி நிலையத்தின் தொழில்நுட்பவியலாளர் பாடநெறியை ஆரம்பிப்பதற்கு தேவையான உபகரணங்களின் ஒரு பகுதி மாத்திரம் வழங்கியமையின் காரணமாக குறித்த பாடநெறி ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) அஹங்கம பிரதேசத்தில் புதிய ஹோட்டல் பாடசாலையொன்றை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டு அதில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட 03 பாடநெறிகளுக்குத் தேவையான ரூபா 8,605,519 தொகையான பயிற்சி உபகரணங்கள் திறன்சார்ந்த அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் 2015 முதல் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், ஹோட்டல் பாடசாலையை நிர்மாணித்தல் 2016 மே வரையிலும் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் உபகரணங்கள் 2015 ஆம் ஆண்டு முதல் அருகிலுள்ள நிலையங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அதிகாரசபையின் தொழிற்பயிற்சி நிலையம் தாபிக்கப்பட்டுள்ள 248 காணிகள் இருந்ததுடன் அதில் அரசாங்க துறைக்குச் சொந்தமான 178 காணிகளும், தனியார் துறைக்குச் சொந்தமான 70 காணிகளும் காணப்பட்டன. 2015 திசெம்பர் 31 வரையில் அரசாங்கத்தின் 32 காணிகளின் உரித்து மாத்திரம் உரித்து அதிகாரசபைக்கு முறையாகக் கையேற்கப்பட்டிருந்ததுடன் 60 காணிகளின் உரித்தைக் கையேற்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், எஞ்சிய 86 காணிகளையும் கையேற்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. தனியார் துறைக்குச் சொந்தமான காணியிலிருந்து 35 காணிகளுக்காக மாத்திரம் இருதரப்பினருக்கும் இடையே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(ஆ) 2006 சனவரி முதல் 2015 மே மாதம் வரை அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் பாதீட்டு படிகளுக்குரிய ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியப் பங்களிப்புப் பணம் ரூபா 207,752,019 தொகை அதிகாரசபையினால் உரிய நிதியத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

(இ) பாடநெறிக்காக விரிவுரையாளர் இல்லாமை, தொழிற்தகைமை மட்ட தரத்திற்குத் தேவையான உபகரணங்கள், வகுப்பறை வசதிகள் போன்றன பூர்த்தி செய்யப்படாமல் இரத்மலானை தேசிய தொழிற்பயிற்சி நிலையத்தில் வளி அமுக்க தொழில்நுட்பவியலாளர் பாடநெறியொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) அனுராதபுரம் மாவட்ட தொழிற்பயிற்சி நிலையத்தின் மோட்டார் வாகன மின்னியல் தொழில்நுட்பவியலாளர் பாடநெறியின் பயிற்சி நடவடிக்கைகளுக்காக 2012 மார்ச் 30 ஆந் திகதி வழங்கப்பட்ட ரூபா 1,639,729 பெறுமதியான 02 புதிய மோட்டார் வாகன பெற்றோல் இயந்திரங்கள் 2015 திசெம்பர் 31 வரையிலும் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்ட போதிலும், அது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

நிதி மோசடியின் அடிப்படையில் வேலை நீக்கஞ் செய்யப்பட்டு வழக்குத் தொடரப்பட்டிருந்த பணிப்பாளர் ஒருவருக்கு அங்கீகாரமின்றி சம்பளமாக ரூபா 1,711,961 தொகை செலுத்தப்பட்டிருந்த உத்தியோகத்தர் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவழிக்கப்பட்ட ரூபா 266,968 பெறுமதியான லங்கா அசோக் லேலண்ட் பேருந்து வண்டி இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது அனுராதபுரம் மாவட்ட அலுவலக வளவில் தரித்து வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) இரத்மலானை தேசிய தொழிற்பயிற்சி நிலையத்தின் ஒட்டுனர் பயிற்சி பாடநெறிக்கு உரித்தாகாத பெரிய தகரம் வளைக்கும் பொன்டின் இயந்திரம் மற்றும் தகரத்தை சுற்றும் உருளை இயந்திரம் ஒட்டுனர் பயிற்சி பாடநெறி வளாகத்தில் நீண்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டன.

(இ) அனுராதபுரம் மாவட்ட தொழிற்பயிற்சி நிலையத்தில் நடாத்தப்படுகின்ற சிற்றுண்டிச்சாலை ஊழியர் பாடநெறிக்குத் தேவையான உபகரணங்கள் காணப்படும் போது அது தொடர்பாக கவனத்தில் கொள்ளாது ரூபா 4,862,672 பெறுமதியான உபகரணங்கள் 2015 மே 06 ஆந் திகதி திறன்சார்ந்த அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டன.

**4.5 நிதியத்தின் குறைவான பயன்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக மூடப்பட்டுள்ள இரண்டு நிலையங்களுக்கும் மேலும் இரண்டு நிலையங்களுக்கும் உரிய 05 வங்கிக் கணக்குகளில் ரூபா 201,737 தொகை பல வருட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் 2011 ஆம் ஆண்டின் போது பயிற்சி உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக வழங்கியிருந்த ரூபா 9,815,345 தொகை உரிய பணிகளுக்காக பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

**4.6 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரசபையின் வளங்கள்**

திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சிற்கு ஒரு உத்தியோகத்தரும் முறையான அங்கீகாரமின்றி இரண்டு வாகனங்களும் வழங்கப்பட்டிருந்ததுடன் திறன் சார்ந்த அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு இரண்டு உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

**4.7 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்தின் பணிப்பாளர் (நிதி) பதவி 2015 ஏப்ரல் 30 ஆந் திகதி முதல் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் 2015 மே 05 ஆந் திகதி முதல் இந்தப் பதவியின் முழுநேர பதில் கடமைக்காக பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டிருந்தார். எனினும் பணிப்பாளர்(நிதி) பதவிக்காக நிரந்தர உத்தியோகத்தரொருவர் 2017 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிலும் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு மேற்கூறப்பட்ட உத்தியோகத்தரின் கீழ் கணக்காய்வு உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டமையினால் நிதிப் பிரிவின் கொடுக்கல் வாங்கல்கள் சுதந்திரமான உள்ளகக் கணக்காய்வின் கீழ் வராமைக்கு இடமளிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 2438 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 1894 ஆனமையால் வெற்றிடங்கள் 544 ஆகக் காணப்பட்டது. வெற்றிடங்களில் 260 விரிவுரையாளர்கள் இருந்தமையினால் இலக்கிடப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்ட எண்ணிக்கைய நடாத்துவதற்கு முடியாதிருந்தது.

(இ) அதிகாரசபையின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் 5.1.1 ஆம் பிரிவின் பிரகாரம் விரிவுரையாளர் பதவிக்காக ஆட்சேர்க்கும் போது தேசிய தொழிற் தகைமையின்

5 ஆம் மட்டம் அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்தின் கீழ் பெறப்பட்ட தொழில்நுட்ப விஞ்ஞான பாடநெறியொன்றைப் பின்பற்றி சித்திபெற்ற சான்றிதழொன்று பெறப்பட வேண்டியிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டின் போது சேர்க்கப்பட்ட விரிவுரையாளர்கள் தொடர்பான தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பரீட்சிக்கப்பட்ட 91 கோவைகளில் 23 பேர்களும் அந்த தகைமைகளை அடையாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) அதிகாரசபையின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் பணிப்பாளர் (மனிதவள மற்றும் நிர்வாகம்) பதவிக்காக ஆட்சேர்ப்பினைச் செய்யும் போது வெளிவாரி மற்றும் உள்ளக விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 5.2.6 ஆம் பிரிவின் பிரகாரம் குறிப்பிட்ட உத்தியோகபூர்வ நேர் முகப்பரீட்சை சபையொன்றின் மூலம் தீர்மானிக்கப்படுகின்ற புள்ளி வழங்கும் திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணானதாக 2015 யூன் 05 ஆந் திகதிய அதிகாரசபையின் தலைவரின் சிபாரிசுடன் பணிப்பாளர் சபையின் 08 அங்கத்தவர்களின் கையொப்பத்துடனான கடிதத்தின் பிரகாரம் அப்பதவிக்காக 2015 ஏப்ரல் 22 ஆந் திகதி முதல் உத்தியோகத்தரொருவர் முறையற்ற வகையில் நியமிக்கப்பட்டிருந்தார்.

(உ) விரிவுரையாளர்களின் மிகையொன்று காணப்படும் கொழும்பில் அமைந்துள்ள தேசிய தொழிற்பயிற்சி நிலையத்தில் சேவைக்காலம் 10 முதல் 16 வருடங்கள் வரையிலாக 6 விரிவுரையாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். பாடநெறியை நடாத்திச் செல்லும் போது இடையில் விரிவுரையாளர்கள் மாற்றப்பட்டமையால் பாடநெறியைத் தொடர்கின்ற பயிலுனர்களுக்கு பிரச்சினைகள் ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் இரத்மலானை மற்றும் அனுராதபுரம் மாவட்ட நிலையங்களின் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஊ) ஊகத்துறை தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அதிகாரசபையினால் நடாத்தப்படாதிருந்த போதிலும் 2011 ஆம் ஆண்டின் போது அந்த துறைக்காக அடிப்படைத் தகைமைகளை பூர்த்தி செய்யாத பெண் விரிவுரையாளர் ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தார். விரிவுரையாளர் பதவிக்குரிய பணிப்பொறுப்புக்கள் அவரால் நிறைவேற்றப்படாதிருக்கும் போது தொடர்ந்தும் சேவை நீடிப்பும் வழங்கப்பட்டிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டின் போது தகவல் தொழில்நுட்ப விரிவுரையாளராக துறை மாற்றப்பட்டிருந்தார். அந்த துறையினதும் பணிப்பொறுப்புக்கள் முறையாக நிறைவேற்றப்படாதிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டு முதல் அங்கீகரிக்கப்பட்ட வேலைத்திட்டமொன்று

காணப்படாதிருந்த போது வாரத்தில் 03 நாட்கள் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றிய இந்த பெண் உத்தியோகத்தர் ஊடாக இணைப்பாளர் நடவடிக்கைகளுக்காக விடுவிப்பதற்கு உயர் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருந்தது.

## 4.8 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடு

புனரமைப்பிற்கு உத்தேசிக்கப்பட்ட எஹெலியகொடை, மாபாகட வெவ, பிங்கிரிய, பத்தேகம மற்றும் வெல்லவாய போன்ற 05 நிலையங்களை நிர்மாணித்தல் தொடர்பான மதியுரைச் சேவைகளை வழங்குவதற்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 2,130,290 செலவிடப்பட்டிருந்த போதிலும், 2016 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் அந்த நிர்மாணங்களுக்கான கொள்வனவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(i) ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 133 என்பவைகளில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் நிறுவனத்திற்குரிய 12 உத்தியோகத்தர்களைக் கொண்ட உள்ளகக் கணக்காய்வு அலகொன்று தாபிக்கப்பட்டிருந்தும் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தை திட்டமிடல், அமுல்படுத்துதல் மற்றும் பின்தொடர் நடவடிக்கை என்பவற்றில் காணப்பட்ட குறைபாடுகளின் காரணமாக அந்த பிரிவினை நடாத்திச் செல்வதால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 5.2 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 யூன் 10 ஆந் திகதி விபத்திற்குட்பட்ட வாகனமொன்று தொடர்பாக 2014 யூலை 30 ஆந் திகதி வரை நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பரிசோதனை நடாத்தப்பட்டிருக்கவில்லை. சாரதிக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்ததுடன் குற்றத்தை ஏற்றுக்கொண்டு தண்டப்பணத்தைச் செலுத்துதல், விபத்தின் போது மூன்றாம் தரப்பினருக்கு ஏற்பட்ட ரூபா 255,950

நட்டத்தையும் செலுத்துமாறு 2012 மே 04 ஆந் திகதி அழைப்பாணையொன்று அனுப்பப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பில் 2015 யூலை 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பாவனையிலிருந்து அகற்றப்பட்ட நடைமுறையல்லாச் சொத்துக்களின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு என்பன சொத்துக்களை பாவனையிலிருந்து அகற்றப்படும் சந்தர்ப்பத்தில் சொத்துக்கள் அகற்றல் கணக்கொன்றினூடாக கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டு இலாபம் அல்லது நட்டமானது உரிய ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட வேண்டுமெனினும், 2009 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையிலும் அகற்றப்பட்ட எந்தவொரு சொத்தினதும் பெறுமதி, சொத்துக்கள் கணக்கு மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு கணக்கிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) 2006 சனவரி 17 ஆந் திகதி முதல் அதிகாரசபையின் தலைவரினால் பிரதி பணிப்பாளரொருவர் மத்திய கலாசார நிதியத்தின் நிர்வாக சபையின் அங்கத்தவர் மற்றும் செயற்பாட்டுப் பணிப்பாளர் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக வராத்திற்கு 3 தடவைகளும் நிர்வாக சபையின் கூட்டம் நடைபெறுகின்ற திகதிகளில் பங்குபற்றுவதற்காகவும் சம்பளத்துடன் விடுவிக்கப்பட்டிருந்தார். 2014 ஆம் ஆண்டு வரையிலும் அந்த உத்தியோகத்தர் இந்த இரண்டு நிறுவனங்களிலும் சேவையில் ஈடுபட்டிருந்தார். அதிகாரசபையில் சம்பளம் பெற்றதுடன் மத்திய கலாசார நிதியத்திலிருந்தும் படியாக ரூபா 5,444,015 தொகையைப் பெற்றிருந்தார்.

2014 செப்தெம்பர் 12 ஆந் திகதி நடைபெற்ற இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை தொடர்பான பொது முயற்சிகள் குழுகூட்டத்தின் போது அதிகார சபையிலிருந்து சம்பளம் பெறுவதற்கு மேலதிகமாக ஏனைய நிறுவனங்களிலிருந்து சம்பளம் பெற்றுக்கொள்ளல் தொடர்பான சனாதிபதி செயலாளரிடம் விசாரித்து ஆலோசனை பெற்றுக்கொள்ளுமாறு செயலாளருக்குக் கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அதிகாரசபையின் ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் தகைமைகள் அல்லது அனுபவங்கள் பூர்த்தி செய்யப்படாதிருக்கும் போது, பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர் (திட்டமிடல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி), பணிப்பாளர் (தொழில் வழிகாட்டி, வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் மேம்படுத்தல்) மூன்று பிரதி பணிப்பாளர்கள், இரண்டு உதவி பணிப்பாளர்கள் மற்றும் சட்ட உத்தியோகத்தர்

பதவிகளுக்காக ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் இல்லாத உதவி பணிப்பாளர் (நிதி) பதவிக்காக உத்தியோகத்தரொருவர் சேர்க்கப்பட்டிருந்தார்.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது நிறுவனத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்பட வேண்டியுள்ளது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புகள் |
| --- | --- |
| (அ) பதவியணியினர் நிர்வாகம் | - ஆட்சேர்ப்பில் ஆகக் குறைந்த தகைமையைப் பூர்த்தி செய்யாத உத்தியோகத்தர்களைச் சேர்த்தல் |
| | - நேர்முகப்பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சை சபைகள் முறையாக அமுல்படுத்தப்படாமை |
| | - முறையான இடமாற்றத்திட்டமொன்று அமுல்படுத்தப்படாமை |
| (ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம் | - முறையான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்படாமை |
| | - சொத்துக்களை இனங்காணும் குறியீடுகள் பயன்படுத்தப்படாமை |
| | - விளைவற்ற சொத்துக்கள் காணப்பட்டமை |
| | - சகல சொத்துக்களும் பொருட்பதிவேடுகளுக்கு எடுக்கப்பட்டமை உறுதிப்படுத்தப்படாமை மற்றும் சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை. |

(இ) வருமான நிர்வாகம்

| | | |
|---|---|---|
| i | பயிலுனர் படிகள் | - பயிலுனர் படி பெற்றமைக்கு பயிலுனர்களின் உறுதிப்படுத்தலொன்று பெறப்படாமை<br>- படிகள் கணிப்பிடப்படும் முறைமையில் வேறுபாடு காணப்பட்டமை. |
| ii | பாடநெறிக் கட்டணம் | - பாடநெறிக் கட்டணம் வங்கியிலிடப்படாமல் விரிவுரையாளர்களினால் பணமாகவே பெறப்பட்டமை.<br>- சகல பகுதிநேர பாடநெறிகளுக்காகவும் அரசிறை அறவிடப்பட்டமை உறுதிப்படுத்தப்படாமை மற்றும் ஏனைய வருமானமொன்றாக இனங்கண்டு கணக்குகளில் வைக்கப்படாமை |
| (ஈ) | நிதிக் கட்டுப்பாடு | - பணிப்பொறுப்புக்களைப் பகிர்ந்தளித்தல் மற்றும் அவை உள்ளகப் பரீட்சிப்பிற்கு உட்படும் வகையில் அமுல்படுத்தப்படாமை<br>- மேற்பார்வை நடவடிக்கைகள் உரிய பிரகாரம் அமுல்படுத்தப்படாமை<br>- செலவினங்களில் வங்கியால் செலுத்தப்பட்ட பெறுமதிக்கும் பேரேட்டில் குறிப்பிடப்பட்ட பெறுமதிக்கும் இடையே வேறுபாடுகள் காணப்பட்டமை. |

ஒப்பம்: எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை - இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் 2015 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14 (2) (சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வு அத்தியட்சகர் அவர்களின் அறிக்கை தொடர்பான தற்போதைய நிலைமை**

2.2.1(ய) தேய்மான கொள்கையினை மாற்றுவதற்கான தேவையானது ஏற்படவில்லை.

2.2.1(டி) 2017 ஆம் ஆண்டின் கணக்கீட்டில் சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2.2.2 ஏற்கெனவே தயாரிக்கப்பட்டுள்ளது.

2.3(ய) அறவிடப்படவேண்டிய மீதித் தொகையான ரூபா 6,966,641.00 இலிருந்து ரூபா 1,453,670.75 மில்லியன்களை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எஞ்சிய மீதியினை நீக்குவதற்குரிய அனுமதியினை கோரும் கடிதத்தினை திறைசேரியிற்கு அனுப்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2.3(டி) கடனாளிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

2.4 அதற்கேற்றவாறு சரிசெய்யப்பட்டுள்ளது.

2.4(ய)i இது தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 இற்கு இணங்க ஓர் விசாரணையானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் பரிந்துரைகள் கிடைக்கப்பெற்றதும் எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2.4(ய)ii உரிய தகவல்கள் கிடைக்கப்பெற்றதும் நடவடிக்கையானது விரைவில் மேற்கொள்ளப்படும்

2.4(ய)iii அதற்கிணங்க, எதிர்காலத்தில் இது சரிசெய்யப்படும்.

2.4(உ)

| பெயர் | பதில் கடமை நியமனம் | காரணம் |
|---|---|---|
| திரு.பி.ராமதாஸ் | நிதி அலுவலர் | முல்லைத்தீவு மாவட்டத்தில் நிதி அலுவலர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்ட அலுவலர் கடமையினை பொறுப்பேற்காமையின் காரணமாக தலைவர் அவர்களின் அனுமதியுடன் கடமை தேவைப்பாட்டின் நிமித்தம் தற்போது வரையில் கடமையானது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

| | | |
|---|---|---|
| திரு. எச். எம். எல். ஏ. சமரநாயக்க | வுசயனௌிழசவ முககஉைநச போக்குவரத்து அலுவலர் | முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் இதனை உள்வாரி பதவி வெற்றிடமொன்றினை நிரப்பும் செயற்பாடு என கருதி அனுமதியினை வழங்கியது. இதற்குரிய அடிப்படை தகைமையாவது மோட்டார் திருத்துநர் துறைசார் ேஏஞ மட்டம் 5 இனை கொண்டிருத்தலாகும். ஆனால் உள்வாரியாக எவரும் ேஏஞ மட்டம் 5 தகைமையினை கொண்டிருக்காமையினால் இவ் வெற்றிடத்தினை நிரப்பமுடியவில்லை. |
| திரு. எச். யூ. காரியவசம் | பணிப்பாளர் (நிதி) | இப் பதவிக்கான வெற்றிடத்தினை 2018 ஆம் ஆண்டில் நிரப்புவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |

2.5(ய) மாவட்ட தொழிற்பயிற்சி நிறுவகம் மற்றும் தேசிய தொழிற்பயிற்சி நிறுவகம் ஆகியவற்றுக்கு பொறுப்பான பிரதி பணிப்பாளர்கள் மற்றும் உதவி பணிப்பாளர்கள் ஆகியோருக்கு பகுதிநேர பாடநெறிகளுக்கான முறையான மதிப்பீடுகளை சமர்ப்பிப்பதன் மூலம் பயிற்சி பிரிவினது அனுமதியினை பெற்று பின்னர் அனுமதியளிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு இணங்க பாடநெறிகளை ஆரம்பிக்க வேண்டியமை தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

2.5(டி) இத்தொகையானது தற்போதும் கூட அதே முறையில் காணப்படுகின்றது.

2.5(உ) பொது திறைசேரியின் அனுமதியானது இதுவரையில் கிடைக்கப்பெறவில்லை. இது 2017 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்படவில்லை.

3.1 மாவட்ட மற்றும் தேசிய நிலையங்களில் பயிலுநர்களுக்கான ஆட்சேர்ப்பின் பொருட்டு ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களாக வெவ்வேறான தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதன் காரணமாக இவ்வாறான செலவினங்கள் அதிகரித்துள்ளன.

தொழிலுக்கு அமர்த்துதல், ஆராய்ச்சி மற்றும் தொழில் முயற்சியாண்மை என்பவை தொடர்பான செலவினங்கள் குறைவடைவதற்கு செலவின முகாமைத்துவ முறைமையின் ஒழுங்குமுறையே காரணமாகும். அதே போல, வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி நடவடிக்கைகளை கண்காணிக்கும் செயற்பாடுகளில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ள போதிலும் அதற்குரிய செலவினங்களை முகாமைத்துவம் செய்வதற்கான செயற்பாடுகள் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளன.

அவ்வாறே, ஊழியர்களின் சம்பளங்கள் மற்றும் படிகளுடன் கூடிய சம்பளம் என்பவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக மேலதிக நேர கொடுப்பனவு மற்றும் ஏனைய போக்குவரத்து படிகள் அதிகரித்துள்ளன. பயிற்சி பொருட்களின் நிமித்தம் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாட்டு வரையறையினுள் செலவுகள்

செய்யப்பட்டுள்ளதுடன் பயிற்சி பொருட்களின் விலை அதிகரிப்பின் காரணமாக இதற்கான செலவினம் அதிகரித்துள்ளது.

3.2

| தொடர் இல | வழக்கு இல | எதிராக வழக்கு தொடர்ந்த நிறுவகம்/ ஊழியர் | 2016 இல் ஏற்பட்ட செலவினம் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| 1. | 2.்.அதி/3668/2013 | திரு. எஸ்.ஏ.டீ..ஜே. சந்திரகுமார (பணிப்பாளர் - நிதி) | ரூபா 154,500.00 கட்டணமானது வழக்கறிஞருக்கும் ரூபா 3,000.00 தொகையானது அரச சாட்சிக்காகவும் | எழுத்து மூலமான அறிக்கையானது 02.02.2018 அன்று தாக்கல் செய்யப்படவுள்ளது. |
| 2. | னுஆசு 1029.்.2014 (இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையினால் வழக்கு தொடரப்பட்டுள்ளது) | திரு. எஸ்.ஏ.டீ..ஜே. சந்திரகுமார (பணிப்பாளர் - நிதி) | ரூபா. 27இ750.்.ம | 26.09.2018 அன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது |
| 3. | ளுஊகுசு - 161.்.2014 | திருமதி. மங்கள குமாரி சியாமுதலி மற்றும் ஏனைய நான்கு நபர்களால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. | பணம் செலுத்தப்பட்டதற்கான விலைப்பட்டியல் தற்போது வரையில் கிடைக்கப்பெறவில்லை | 14.03.2018 அன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது |
| 4. | ளுஊகுசு-309.்.2014 | திரு.டீ. எம். ஜகம்பத் மற்றும் ஏனைய நான்கு நபர்களால் வழக்கு | பணம் செலுத்தப்பட்டதற்கான விலைப்பட்டியல் தற்போது வரையில் கிடைக்கப்பெற | 23.01.2018 அன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தாக்கல் செய்யப்பட்டுள்ளது. | வில்லை | |

அதற்கிணங்க, 04 வழக்குகள் மாத்திரம் 30.12.2016 ஆம் திகதியளவில் செயற்படும் நிலையில் காணப்பட்டன.

அதிகாரசபையினால் வழக்கறிஞர் கட்டணமாக ரூபா 182,250.00 தொகையானது செலவுசெய்யப்பட்டிருந்தது. நிதிமோசடி காரணமாக சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட அலுவலரிற்கு வழங்கப்பட்ட சம்பளங்களை மீள அறவிடுவதற்கு வழக்கு இல னுஆசு 1029.். 2014 இன் கீழ் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளதுடன் தற்போது அதனை விவாதத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், தற்போது இது தொடர்பாக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவானது தற்போது விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

4.1(ய) * மிகவும் பிரபல்யம் வாய்ந்த தனியார் துறையினை சேர்ந்த 07 தெரிவுசெய்யப்பட்ட நிறுவகங்களுன் கூட்டாக நாடளாவிய ரீதியில் வருடாந்தம் 4000 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகின்றது.

* வார இறுதி தொழில்முனைவோர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களாக 08 நாட்கள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் ஏற்படுத்தப்படும் விழிப்புணர்வுகள் மற்றும் பயிற்சி வழங்கல்கள் என்பவற்றினால் ளுநுஜ கடன்கள் ஊடாக பாரிய முன்னேற்றத்தினை பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது.

* “இடைவெளி நிரப்புதல்” வேலைத்திட்டமானது ஏற்கெனவே மின்னியலாளர் மற்றும் குளிரூட்டி மற்றும் வளிச்சீராக்கி பாடநெறிகளின் பொருட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பெரும் எண்ணிக்கையான வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவகங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

* அழகுக்கலை, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் ஹோட்டல்கள் மற்றும் சுற்றுலா ஆகிய துறைகள் தொடர்பாக அவசியமான செயலமர்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

* ஆஐளு முறைமை ஊடாக அவசியமான தரவு பதிவேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

* வருடாந்த நிதி ஏற்பாட்டு அளவிற்கு ஏற்றவாறு மாவட்ட மற்றும் மாகாண மட்டங்களில் தற்போது இவ் வேலைத்திட்டங்கள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

* ஒவ்வொரு அலுவலரிடத்திலும் தனித்தனியான வருடாந்த, மாதாந்த இலக்குகள் வழங்கப்பட்டு தொழில் வழிகாட்டல் வேலைத்திட்டங்கள்

வெற்றிகரமான முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இது தொடர்பாக தமிழ் மொழிமூல அலுவலர்களை புதிதாக ஆட்சேர்ப்பு செய்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

* ஒவ்வொரு வருடமும் தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை, அரச சுற்றுநிருபம் மூலமும் அவ்வாறே துண்டுப்பிரசுரம், சுவரொட்டிகள் மற்றும் பதாகைகள் ஆகியவற்றின் மூலமும் விரிவான பிரச்சார நடவடிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டு மக்களிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

* புகையிரத நிலையங்கள் மற்றும் பொது பேரூந்துகள் என்பவற்றில் கவர்ச்சிகரமான ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டு பிரச்சார செயற்பாட்டு வேலைத்திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டுள்ளன

* வெவ்வேறு அலுவலர்கள் நிலைய மட்டத்திலும் மற்றும் பாடநெறி மட்டத்திலும் வழிகாட்டல் கைந்நூலின் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி முன்னேற்றங்களை அறிக்கையிடல் சிறந்த முறையில் இடம்பெறுகின்றது.

* பயிற்றுநர்களின் தொழில் தொடர்பான திருப்தி மற்றும் பயிலுநர்களின் ஆர்வம் ஆகியன அதிகரிக்கும் நோக்கில் செயற்பட்டு பயிலுநர்களின் பங்குபற்றல்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. அவ்வாறே, 2017 ஆம் ஆண்டிலிருந்து அனைத்து பாடநெறிகளும் இலவசமாக மேற்கொள்ளப்படுவதனால் இத் துறைகள் சார்பாக பயிலுநர்களின் ஆர்வமானது மேலும் அதிகரிக்கும்.

4.1(டி) ஐ. 2016 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை1961 ஆக காணப்படுவதோடு அவற்றின் பொருட்டு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பயிலுநர்களின் எண்ணிக்கை 31,628 ஆகும்.

ஐஐ. 2016 ஆம் ஆண்டில் தராதர அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாத பாடநெறிகளின் எண்ணிக்கை 111 ஆக காணப்படுவதோடு ஏேஞ 4 பாடநெறிகளின் எண்ணிக்கை 521 ஆகும்.

ஐஐஐ. 2016 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட முழுநேர மற்றும் பகுதிநேர பாடநெறிகளின் எண்ணிக்கை 1363 ஆக காணப்படுவதோடு நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 2073 ஆகும்.

ஐஏ. 2016 ஆம் ஆண்டில் 05 இலும் குறைவான பயிலுநர்களை கொண்ட பாடநெறிகளின் எண்ணிக்கை 10 ஆகும்.

4.1(உ) ஐ. 2014/ 2015 - 10, 2016 - 11, 2017 - 10 என்ற அடிப்படையில் 31 வியாபார திட்ட அமுலாக்கல் மத்திய நிலையங்கள் (டீரளஅைநளள ீடயெ ஐஅிடநஅநவெயவைழெ ஊநவெநசள) ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

ஐஏ. 2017 இல் அடையாளங்காணப்பட்ட 11 மத்திய நிலையங்களில் 34 பாடநெறிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஏஐ. வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் வெளிநாட்டு தொழில் முகவர்கள் நிறுவகங்கள் ஆகியவற்றுடன் ஒருங்கிணைப்பினை மேற்கொண்டு வெளிநாட்டு தொழில்வாய்ப்புகளை எதிர்பார்த்துள்ள 31 பேருக்கு குளிரூட்டி மற்றும் வளிச்சீராக்கி துறைசார் விசேட பயிற்சி வேலைத்திட்டமொன்று 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

4.1(ன) இப் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தொழிற்பயிற்சி அதிகாரசபை சட்டமூலத்திற்கு இணங்க தொழிற்பயிற்சி சபைகளை ஆரம்பிக்க வேண்டியிருந்தன. அதற்கிணங்க, தொழிற்பயிற்சி அதிகாரசபையானது ஆரம்பத்திலேயே பயிற்சி சபைகளை ஆரம்பித்து செயற்படுத்தியிருந்தது. ஆனால், உறுப்பினர்களை ஒன்றுகூட்டுவதில் காணப்பட்ட அசௌகரியங்கள் உள்ளடங்கலான பல காரணங்களினால் அவைகள் பின்னர் செயலிழந்து போயின. ஆயினும் இதன் செயற்திறனினை கண்டறிந்து அமைச்சரிற்கு தெரியப்படுத்தி எதிர்காலத்தில் இப் பயிற்சி சபைகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் பயிற்சி தேவைகளை கண்டறிதல், பாடநெறிகள் தொடர்பாக நவீன தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்தல், மேலதிக பயிற்சிகளின் தரங்களினை மேம்படுத்தல், பாடத்திட்டங்களை புதுப்பித்தல் போன்ற நோக்கங்களை இலக்குகளாக கொண்டு சில பயிற்சி துறைகளிற்கு எமது நிறுவகத்தினால் முன்னணி தனியார் துறை நிறுவகங்களை சேர்ந்த நிபுணர்கள் அடங்கலான ஆலோசனை குழுவானது ஸ்தாபிக்கப்பட்டுள்ளதோடு துறைசார் திறன்கள் அபிவிருத்தி திட்டத்தின் (ளுளுனு) மூலம் மேற்கூறப்பட்ட இலக்குகளை எட்டும் பொருட்டு 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் துறைசார் திறன்கள் சபையினால் சில பயிற்சி துறைகள் தொடர்பாக துறைசார் சபைகள் (ளுநஉவழச உழரஉெடை) ஸ்தாபிக்கப்பட்டு தொழிற்பயிற்சியின் தரத்தினை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. இதன் மூலம் பயிற்சி சபைகளின் தேசிய மட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

4.1(ந) 2016 ஆம் ஆண்டில் 232 பயிற்சி மத்திய நிலைங்கள் மற்றும் 35 இணைக்கப்பட்ட மத்திய நிலையங்கள் ஆகியவற்றுடன் கூடியதாக 267 மத்திய நிலையங்களில் பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

4.1(க) * இதுவரையில் மத்திய நிலையத்தில் ஒரு வருட பொறிவலர் பாடநெறியின் பொருட்டு 14 பயிலுநர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு வெற்றிகரமான முறையில் பாடநெறியானது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

* அஹங்கம ஹோட்டல் பாடசாலையினை நவீனமயப்படுத்தும் திட்டம் மற்றும் குச்சவெளி ஹோட்டல பாடசாலையினை நிர்மாணிக்கும் திட்டம் ஆகியன 2016 ஆம் வருட முடிவின் போது நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை

என்பதுடன் குச்சவெளி ஹோட்டல் பாடசாலையின் நிர்மாண பணிகள் தற்போது நிறைவுசெய்யப்பட்டுள்ளதுடன் அஹங்கம ஹோட்டல் பாடசாலையினை நவீனமயப்படுத்தும் செயற்பாடானது இவ் வருடத்தினுள் முடிவுறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

4.2(ய) • பொறுப்பேற்பதற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணிகளில் 18 காணிகளில் மட்டும் இதுவரையில் நில அளவீடானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. கையேற்பதற்குரிய ஏனைய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

• அவ்வாறே, உடன்படிக்கையானது கைச்சாத்திடப்படாத 35 மத்திய நிலையங்கள் தொடர்பாக புரிந்துணர்வு உடன்படிக்கையினை கைச்சாத்திடுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4.2(டி) இதுவரையில் இரண்டு தவணைகளில் ரூபா 67,674,000.00 தொகை நிதியானது செலுத்தப்பட்டுள்ளது.

4.2(உ) இதுவரையில், பாடநெறி தொடர்பாக 14 பயிலுநர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4.2(ன) இதுவரையில், இவ் உபகரணங்கள் பயிற்சி நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தப்பட்டு வருவதுடன் அவற்றினை திருத்தும் செயற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன.

4.3 நிதி மோசடி தொடர்பாக சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட அலுவலருக்கு வழங்கப்பட்ட சம்பளங்களை அறவிடுவதற்காக னுஆசு 1029.:.2014 என்ற நிதியினை அறவிடும் (ஆழநெல சுநஉழஎநசல ஆயவவநச) வழக்கானது கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ளதுடன் தற்போது அதனை விவாதத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், இது தொடர்பாக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் விசாரணையானது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இவ் அலுவலருக்கு சம்பளமாக ரூபா 1,711,961.00 நிதித்தொகையானது வழங்கப்பட்டுள்ளமையினை ஏற்றுக்கொள்கின்றேன். இந் நிதியினை அறவிடுவதற்கு மாவட்ட நீதிமன்றில் இவ் அலுவலருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது. இதுவரையில் வழக்கானது விவாதிக்கப்பட்டு வருகின்றது.

4.4(ய) போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

4.4(டி) இவ் உபகரணமானது உலோக வேலையுடன் தொடர்புடைய துறையிற்குரியதாக விளங்குகின்றமையினால் காய்ச்சி இணைத்தல் துறைசார் பயிலுநர்களுக்கு மேலதிக அறிவினை வழங்குவதனாலும் மற்றும் ஏனைய விசேட வேலைத்திட்டங்கள் தொடர்பாக பயன்படுத்தப்படுவதனாலும் இது மேலும் இப் பிரிவில் பேணப்படுகின்றது.

4.4(உ) இதுவரையில், உரிய உபகரணத்தினை பயன்படுத்தி இப் பாடநெறியானது வெற்றிகரமாக நடாத்தப்பட்டு வருகின்றது.

4.5(ய) 165199 ஆம் இலக்க கணக்கினை மூடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏனைய நான்கு கணக்குகளும் தற்போது உயிர்ப்பாக காணப்படுகின்றன.

4.5(டி) பாடநெறிகளிற்கு தராதர அங்கீகாரங்களை பெற்றுக்கொள்ளும் பொருட்டு அவசியமான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு இந் நிதியானது கிடைக்கப்பெற்றுள்ளதுடன் இதுவரையில், பெரும் எண்ணிக்கையான பாடநெறிகள் தொடர்பாக தராதர அங்கீகாரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கிணங்க, இந் நிதியினை திறைசேரியின் மூலதன ஒதுக்கீட்டிற்கு மாற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

4.6 கீழே தரப்பட்டுள்ள மூன்று அலுவலர்களும் அதிகாரசபையிற்கு பொறுப்பான அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தனர்.

1. திரு.பீ.பீ.ஜி.ஐ.பீ. வகந்தலே
2. திரு. ஆர்.டீ.எஸ்.ஜே. குமார
3. செல்வி.பீ.பிரேமிளா

அதற்கு மேலதிகமாக சாரதியான திரு. ஆர். விமலநாதன் அவர்கள் நிரந்தர பதவிக்குரிய ஒட்டுமொத்த சம்பள கொடுப்பனவினை மீள் அளிக்கும் அடிப்படையில் துறைசார் திறன்கள் அபிவிருத்தி திட்டத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டில் சம்பளமாக வழங்கப்பட்ட முழுத்தொகையானது அதிகாரசபையிற்கு மீள் அளிக்கப்பட்டுள்ளது.

அதிகாரசபையிற்கு பொறுப்பான அமைச்சில் போதியளவான குழாம் வாகனங்கள் காணப்படவில்லை எனவும் அதற்காக தற்காலிகமாக வாகனங்களை வழங்குமாறும் கடிதம் மூலம் கோரிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க, அமைச்சரவையின் குழாமிற்கு வாகனங்களை பெற்றுக்கொள்ளும் வரையில் இவ் வாகனங்கள் அமைச்சிற்கு வழங்கப்பட்டன. அமைச்சரவையின் குழாமிற்கு வாகனங்கள் கிடைக்கப்பெற்றதும் இவ் வாகனங்களை பயனபாட்டிற்காக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

4.7(ய) 2018 ஆம் ஆண்டில் பணிப்பாளர் (நிதி) பதவி வெற்றிடத்தினை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

4.7(டி) துறைசார் திறன்கள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அதிகாரசபையிற்கு சொந்தமான தொழிற்பயிற்சி மத்தியநிலையங்களில் புதிதாக நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள அனைத்து கட்டிடங்களும் 2016.12.31 ஆம் திகதி வரையில் கட்டி முடிக்கப்படவில்லை. ஆயினும், இம் மத்திய நிலையங்களில்

ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த பாடநெறிகளை ஆரம்பிப்பதற்கு இயலவில்லை. தற்போது வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ள மத்திய நிலையங்களில் மாத்திரமே பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவ்வாறே, வருடாந்த பயிற்சி திட்டத்திற்கு இணங்க தீர்மானிக்கப்பட்டவாறு பயிற்றுநர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கையினை மேற்கொண்ட போதிலும் உரிய தகைமைகளுடன் கூடிய விண்ணப்பதாரிகள் விண்ணப்பத்தினை மேற்கொள்ளாமையின் காரணமாக அவ் வெற்றிடங்களை நிரப்பமுடியாமல் போயுள்ளது.

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையில் அலுவலர்களை அனுமதிக்கும் போது பதவிகளில் வகிப்பவர்களே அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் இரண்டாம் நிலை பதவிகளில் உள்ள அலுவலர்கள் அவர்களின் தகைமைகளின் அடிப்படையில் இரண்டாம் நிலை மட்ட பதவிகளில் நிலவும் வெற்றிடங்களிற்கு உள்வாங்கல் செய்யப்படுவதுடன் ஆரம்ப மட்டத்திற்கு அனுமதிக்கப்பட்ட அலுவலர்கள் சேவையிலிருந்து ஓய்வு பெறல் மற்றும் நீக்கப்படல் போன்ற காரணங்களினால் இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப நிலை ஆகியவற்றில் நிலவும் அனுமதிக்கப்பட்ட நிரந்தர பதவிகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.

4.7(உ) நாட்டில் முதல் முறையாக தேசிய தொழிற் தகைமை (ஏேஞ) சட்டகமானது 2007 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. அம் முறையின் கீழ் தேசிய தொழிற் தகைமை மட்டம் 05 ஆனது 2012 ஆம் ஆண்டிலிருந்து ஒரு சில பாடநெறிகளின் பொருட்டு மாத்திரம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதன் பின்னர் தொழிற்பயிற்சி அதிகாரசபையிலுள்ள பயிற்றுநர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக பத்திரிகை வாயிலான விளம்பரங்களை மேற்கொண்டு ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டன. ஆயினும் தொழிலாளர் சந்தையில் தேசிய தொழிற் தகைமை மட்டம் 05 இனை நிறைவுசெய்த விண்ணப்பதாரிகளிடமிருந்து போதியளவான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாமையின் காரணமாக இப் பயிற்றுநர்களுக்கான வெற்றிடங்களின் பொருட்டு ஆட்சேரப்பினை மேற்கொள்ள முடியாத இக்கட்டான நிலையிற்கு தள்ளப்பட்டோம். ஆயினும், பாடநெறிகளை நடாத்துவதற்கான தேவையின் அடிப்படையில் தேசிய தொழிற் தகைமை மட்டம் 04 அல்லது அதற்கு சமமான தகைமையினை உடைய மற்றும் ஒரு வருடகால சேவை அனுபவத்தினை கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் ஒப்பந்த அடிப்படையில் பயிற்றுநர் பதவிகளிற்காக உள்வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ் அதிகாரசபையின் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கான அனுமதியானது 2014.03.18 ஆம் திகதியன்று பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆட்சேர்ப்பு நடைமுறையிற்கு இணங்க பயிற்றுநர் பதவியானது முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பவியல் (ஆயு1-2) சேவை வகுப்பின் கீழ் அனுமதியளிக்கப்பட்டுள்ளதுடன் ஆட்சேர்ப்பிற்கான தகைமையாக தேசிய தொழிற் தகைமை மட்டம் 05 என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆட்சேர்ப்பு நடைமுறையிற்கு அனுமதியளிக்கப்படுவதற்கு

முன்னர் காணப்பட்ட தகைமைகளின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு பயிற்றுநர் பதவிகளில் உள்ள அலுவலர்களிற்கு முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பவியல் அல்லாத (ஆயு1-2) சேவை வகுப்பில் நிரந்தர அலுவலர் என்ற அடிப்படையில் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. ஆயினும், அதன் கீழ் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பயிற்றுநர்கள் அதற்குரிய தகைமைகளுடன் கூடியதாக 03 வருட சேவையினை நிறைவு செய்ததன் பின்னர் அவர்களின் சேவையினை உறுதிசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

4.7(ன) பணிப்பாளர் (மனிதவள மற்றும் நிர்வாகம்) பதவி தொடர்பாக 2015.02.22 தொடக்கம் வெற்றிடமானது நிலவியதுடன் அதற்காக அதுவரையில் பிரதி பணிப்பாளராக 10 வருட சேவை அனுபவத்தினை கொண்டிருந்த உள்வாரியாக அப் பதவிக்குரிய தகைமையினை கொண்டிருந்த திரு. டபில்யூ. ஏ. ரணவீர அவர்கள் பதில் அடிப்படையில் நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் அவரது செயற்திறன் மற்றும் முன்னர் அதிகாரசபையில் வகித்த கீழே தரப்பட்டுள்ள பதவிகள் கருத்திற்கொள்ளப்பட்டு பணிப்பாளர் சபையின் மூலம் திரு. டபில்யூ. ஏ. ரணவீர அவர்களின் பணிப்பாளர் (மனிதவள மற்றும் நிர்வாகம்) பதவியானது உறுதிசெய்யப்பட்டது.

டபில்யூ. ஏ. ரணவீர அவர்கள் முன்னர் வகித்த பதவிகள்

| பதவி | சேவைக் காலம் |
|---|---|
| பதில் பணிப்பாளர் (தொழில் வழிகாட்டல் மற்றும் தொழில்வாய்ப்புகளில் அமர்த்துதல்) | 2006.10.02 - 2008.02.25. |
| பணிப்பாளர் நாயகம் (தற்காலிக) | 2008.02.25 - 2008.04.15. |
| பணிப்பாளர் நாயகம் (பதில்) | 2008.04.15 - 2010.12.10. |
| பதில் பணிப்பாளர் (தொழில் வழிகாட்டல் மற்றும் தொழில்வாய்ப்புகளில் அமர்த்துதல்) | 2012.11.05 - 2014.06.17. |
| பணிப்பாளர் (மனிதவள மற்றும் நிர்வாகம்) | 2015.04.24 ஆம் திகதி தொடக்கம் இதுவரை |

இந் நியமனமானது தொழிற்பயிற்சி அதிகாரசபை சட்டத்தின் 16.(1) பிரிவின் கீழ் பணிப்பாளர் சபையிற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு இணங்க மேற்கொள்ளப்பட்டுள்ளது.

4.7(ந) முறையாக இடமாற்றங்களை மேற்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பயிற்றுநர்கள் அடங்கலாக அதிகாரசபையின் அலுவலர்களின் பொருட்டு இதுவரையில் முறையான இடமாற்ற நடைமுறையொன்று காணப்படுகின்றது. வருடாந்த இடமாற்றங்களிற்கு

மேலதிகமாக பாடநெறிகளை மாற்றுவதனால் ஏற்படும் சேவை அவசியத்தின் அடிப்படையில் இடமாற்றங்களை மேற்கொள்ளவேண்டி ஏற்படுகின்றது.

4.7(க) இவ் அலுவலரை வெள்ளவத்தை தொழிற்பயிற்சி மத்திய நிலையத்திற்கு இடமாற்றும்படி பணிப்பாளர் (பயிற்சி) அவர்கள் கோரிக்கை விடுத்திருந்ததுடன் வெள்ளவத்தை மத்திய நிலையத்தில் ரேஎ டுநஎநட 4 கணனி பாடநெறியொன்று காணப்பட்டமையினால் இடமாற்றமானது மேற்கொள்ளப்படவில்லை.

அதிகாரசபையின் பிரச்சார அலுவல்களை முறையாகவும் மற்றும் துரிதமாகவும் மேற்கொள்வதற்காக ஊடக அலகு ஒன்றிற்கான தேவையானது நீண்ட காலமாக நிலவியதன் காரணமாக ஊடக அலகொன்று ஸ்தாபிக்கப்பட்டு இவ் அலுவலர் அதனுடன் இணைக்கப்பட்டுள்ளார். இவ் அலுவலரின் ஊடகம் தொடர்பான நீண்டகால அனுபவத்தின் காரணமாக இவ் அலகின் செயற்திறனானது மேம்பட்டுள்ளது. அவ்வாறே, ஏனைய அலுவலர்களிடத்தில் ஊடகம் தொடர்பான அனுபவம் மற்றும் ஆற்றல் என்பன காணப்படுவதன் காரணமாக அவர்கள் இவ் அலகிற்கு இணைக்கப்பட்டுள்ளனர். இவ் அலகினை ஸ்தாபிப்தற்கு பணிப்பாளர் சபையின் அனுமதியானது பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இவ் அலகானது தொழில்வழிகாட்டல் மற்றும் தொழில்வாய்ப்புகளில் அமர்த்துதல் பிரிவின் கீழ் ஓர் உப அலகாக செயற்பட்டுவருகின்றது.

4.8 ளுளுஹ திட்டத்தின் கீழ் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டிகளில் புதுப்பிப்பதற்கு முன்மொழியப்பட்ட 50 மத்திய நிலையங்களில் 43 இற்குரிய புதுப்பித்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்குமாறு வழங்கப்பட்ட ஆலோசனையிற்கு இணங்க அவசியமான வரைபடங்கள் மற்றும் பொருள் விலைப்பட்டியல்கள் என்பவற்றினை தயாரிக்கும் பணியானது தெரிவு செய்யப்பட்ட நிறுவகங்களிடம் கையளிக்கப்பட்டன. அதன் பின்னர் ளுளுஹ திட்டதின் மூலம் இவ் எண்ணிக்கையானது 31 ஆக குறைக்கப்பட்டமையினால் அவற்றுக்கான வரைபடங்கள் மற்றும் அவற்றில் 28 இற்குரிய பொருள் விலைப்பட்டியல்கள் என்பன தயாரித்துக்கொள்ளப்பட்டதுடன் ஆலோசனை நிறுவகத்திற்கான கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலே காட்டப்பட்டுள்ள 09 மத்திய நிலையங்களையும் இதற்கிணங்க புதுப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவற்றில் நுவரேலியா, புல்னாவ ஆகிய மத்திய நிலையங்கள் 2016 ஆம் ஆண்டில் கொள்வனவு நடவடிக்கைகளை மேற்கொண்டு புதுப்பித்தல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன. கொடகவெல மற்றும் வெயாங்கொட ஆகிய மத்திய நிலையங்கள் புதுப்பித்தல் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் முகமாக கொள்வனவு நடவடிக்கைகளை நிறைவுசெய்து ஒப்பந்தங்களை வழங்கியுள்ளன. ஏனைய மத்திய நிலையங்களின் புதுப்பித்தல் செயற்பாடுகள் திட்டத்திலிருந்து நிதி கிடைப்பதற்கு ஏற்றவாறு எதிர்காலத்தில் ஆரம்பிக்கப்படும்.

5.1 எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை எட்டும் முகமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

5.2(ய) மூன்றாம் தரப்பினருக்குரிய காப்புறுதி நட்ட ஈடு இனை எமது காப்புறுதி கம்பனியிலிருந்து பொற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

5.2(டி) அதற்கிணங்க 2017 ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் சீராக்கல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கையானது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

5.2(உ) இவ் அலுவலர் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் கட்டளைக்கு இணங்க ஜனாதிபதியின் செயலாளர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

அவரிற்கு தலைவர் அவர்களின் அனுமதியுடன் வாரமொன்றிற்கு 03 அரைநாள் விடுமுறைகள் அளிக்கப்பட்டன. தொழிற்பயிற்சி அதிகாரசபை சட்டத்திற்கு இணங்க தலைவர் அவர்கள் பிரதான நிறைவேற்று அலுவலராக விளங்குவதனால் இவ் விடுவிப்பானது மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அவர் மத்திய கலாச்சார நிதியத்தின் நிர்வாக சபையின் மூலம் அனுமதிக்கப்பட்ட படியினை பெற்றுக்கொண்டுள்ளார். இது தொடர்பாக மத்திய சலாச்சார நிதியமானது அரசதுறை நிறுவகங்கள் தொடர்பான குழு (ஊழுீநு) கூட்டத்திற்கு அழைக்கப்பட்டு கலாச்சார அமைச்சின் செயலாளர் அவர்களிடம் இவ் அலுவலருக்கு வழங்கப்பட்ட படி தொடர்பாக பொது திறைசேரியின் அனுமதியினை பெற்றுக்கொள்ளுமாறு கட்டளை வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே, அவ் அலுவலர் முழுநேரமாக அல்லாது வாரமொன்றிற்கு 03 அரைநாட்கள் மட்டும் மத்திய கலாச்சார நிதியத்தில் கடமையாற்றியதாக குறிப்பிட்டிருந்தார்.

5.2(ன) (ை) பணிப்பாளர் நாயகம் பதவி

தொழிற்பயிற்சி அதிகாரசபையின் ஆட்சேர்ப்பு நடைமுறையிற்கு அமைவாக பணிப்பாளர் நாயகம் பதவிக்கு கீழே தரப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் அனுபவங்களை கொண்டிருத்தல் வேண்டும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து எந்தவொரு துறையினையும் சார்ந்த முதல் பட்டத்தினை பெற்றிருத்தல். அத்துடன்

எந்தவொரு துறையினையும் சார்ந்த முதுநிலை பட்டமொன்றினை (பட்டப்பின் பட்டம்) பெற்றிருத்தல் அல்லது முகாமைத்துவம் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவகத்திலிருந்து இணை அங்கத்துவ தகைமையினை பெற்றிருத்தல். மற்றும்

அரச/ கூட்டுத்தாபனம்/ சபை/ அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவகமொன்றில் முகாமைத்துவ மட்ட பதவியில் ஆகக் குறைந்தது 20 வருட கால சேவை அனுபவத்தினை கொண்டிருத்தல். (ஆகக் குறைந்தது 5 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் சேவையாற்றியிருத்தல் வேண்டும்)

அதற்கிணங்க, நியமனம் செய்யப்பட்டுள்ள அலுவலர் 1990 ஆம் ஆண்டில் ருகுணு பல்கலைக்கழகத்தில் விவசாய விஞ்ஞான பாடநெறி தொடர்பான விசேட பட்டத்தினையும் (டீ.ளுஉ யுபசஉைரடவரசந (ளுிநஉயைட) மற்றும் 1995 ஆம் ஆண்டில் ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வன விஞ்ஞானம் தொடர்பான பட்டப்பின் பட்டத்தினையும் (ஆளஉ) பெற்றுக்கொண்டுள்ளார். முதல் பட்டத்தினை பெற்றுக்கொண்டதன் பின்னர் 1991 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரை கல்வி மற்றும் தொழில்நுட்ப நிறுவகங்களில் முகாமைத்துவ சேவை வகுப்பிலும் மற்றும் அதனிலும் பார்க்க கூடிய வெவ்வேறு பதவிகளை வகித்துள்ளதுடன் இக் காலப்குதியில் ஜெயவர்தனபுர பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகம், அம்பாறை ஹாடி உயர் தொழில்நுட்ப நிறுவகம், ரச்லூட் தனியார் நிறுவகம் போன்ற நிறுவகங்களில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்ட பதவிகளில் 08 வருடங்களிற்கும் கூடிய காலம் கடமையாற்றியுள்ளார்

புள்ளிகள் வழங்கப்படும் முறையில் மேலதிக கல்வி/ தொழிற் தகைமையாக அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவகத்தின் (ீசழகநளளழைெயட ஐளெவவைரவந) பூரண அங்கத்துவம் (ஆநஅடிநசளாip) அல்லது பட்டய (ஊாயசவநன) தகைமை ஆகியன கருத்திற்கொள்ளப்படுவதோடு இவ் அலுவலர் இலங்கை உயிரியல் நிறுவகத்திலிருந்து (ஐளெவவைரவந ழக டீழைடழபல ளுசi டயமெய) பூரண அங்கத்துவ தகைமை மற்றும் பட்டய தகைமை ஆகியவற்றினை பெற்றுக்கொண்டுள்ளார்

(ii) பணிப்பாளர் (பயிற்சி)

இப் பணிப்பாளர் (பயிற்சி) பதவியில் இருந்த அலுவலர் முன்னைய முகாமைத்துவ தீர்மானத்திற்கு அமைவாக நியமனம் செய்யப்பட்டதுடன் தற்போது அதிகாரசபையின் சேவையிலிருந்து விலகியுள்ளார்.

(iii) பணிப்பாளர் (திட்டமிடல். ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி)

பணிப்பாளர் (திட்டமிடல். ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி) பதவியில் இருந்த அலுவலர் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் ஆட்சேர்ப்பு நடைமுறையிற்கு அமைவாக உரிய தகைமைகளை பூர்த்தி செய்துள்ளார். உரிய பதவி தொடர்பாக விண்ணப்பதாரியால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கல்வி மற்றும் தொழிற்தகைமைகள் தொடர்பான விபரங்கள் தனிப்பட்ட கோவையிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது

அதற்கிணங்க, 1995 ஆம் ஆண்டில் கொழும்பு பல்கலைக்கழகத்தில் இரசாயனவியல் விசேடத்துவத்துடன் கூடிய சிறப்பு பட்டமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. 2002 ஆம் ஆண்டில் ருniஎநசளவைல ழக டுழனெழெ இலிருந்து கலாநிதி பட்டமானது (ீhனு) பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. கலாநிதி பட்டத்தினை பெற்றுக்கொண்டதன் பின்னர் தொழில்நுட்பவியல் நிறுவகத்தில் உயர் முகாமைத்துவ மட்ட பதவியில் 05 வருடங்கள் மற்றும் 07 மாதங்கள் சேவையாற்றியுள்ளார். அத்துடன், ஐக்கிய அமெரிக்காவில் ீழளவ-னுழஉவழசயட

சுநளநயசஉா குநடடழறு ஆக 04 வருடங்கள் செயற்பட்டுள்ளார். இம் முகாமைத்துவ சேவை வகுப்பானது தொழிற்தகைமையாக காணப்படுவதுடன் மேலதிக கல்வி/ தொழிற்தகைமை ஆகவும் காணப்படுகின்றது

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையிற்கு இணங்க சிரேஷ்ட நிறைவேற்று (ர்ஆ 1 - 1) வகுப்பிற்கு கலாநிதி பட்டமானது தகைமையாக குறிப்பிடப்படவில்லை என்பதுடன் பணிப்பாளர் நாயகம் பதவியின் பொருட்டு கலாநிதி பட்ட தகைமையானது ஐந்து வருட உயர் முகாமைத்துவ மட்ட தகைமையுடன் குறிப்பிடப்பட்டுள்ளமையினால் பணிப்பாளர் நாயகம் பதவியிலும் குறைந்த பதவியான பணிப்பாளர் பதவியிற்கு கலாநிதி பட்டமொன்று மற்றும் ஐந்து வருடங்களிற்கும் மேற்பட்ட ஆராய்ச்சி மற்றும் திட்டமிடல் துறைசார் அனுபவம் ஆகியன போதுமானவை என நேர்முகத்தேர்வு குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் “முகாமைத்துவம்” நியம முறை ஒன்றினால் வரையறுக்கப்படவில்லை. அதனால், வெவ்வேறு நேர்முகத்தேர்வு குழுக்களினால் உயர் முகாமைத்துவத்திற்குரிய சேவை அனுபவம் தொடர்பாக எடுக்கப்படுகின்ற தீர்மானமானது வேறுபடும். அதனால் முதிர்ச்சி மற்றும் அனுபவம் மிக்க நேர்முகத்தேர்வு குழுவினால் வழங்கப்பட்ட புள்ளிகள் தொடர்பாக எதனையும் தெரிவிக்க முடியவில்லை

(ஊ) பணிப்பாளர் (தொழில்வழிகாட்டல், தொழில்வாய்ப்புகளிற்கு அமர்த்துதல். மற்றும் ஊக்குவிப்பு)

பணிப்பாளர் (தொழில்வழிகாட்டல், தொழில்வாய்ப்புகளிற்கு அமர்த்துதல். மற்றும் ஊக்குவிப்பு) பதவிக்கு ஆட்சேர்ப்பினை மேற்கொண்ட போது விண்ணப்பதாரி அவர்கள் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் ஆட்சேர்ப்பு நடைமுறையிற்கு இணங்க உரிய தகைமைகள் பூர்த்தி செய்திருந்தார். உரிய பதவி தொடர்பாக விண்ணப்பதாரி மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கல்வி மற்றும் தொழிற்தகைமை தொடர்பான விபரங்கள் தனிப்பட்ட கோவையிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன

இலங்கையில் “முகாமைத்துவம்” நியம முறை ஒன்றினால் வரையறுக்கப்படவில்லை. அதனால், வெவ்வேறு நேர்முகத்தேர்வு குழுக்களினால் உயர் முகாமைத்துவத்திற்குரிய சேவை அனுபவம் தொடர்பாக எடுக்கப்படுகின்ற தீர்மானமானது வேறுபடும். அதனால் முதிர்ச்சி மற்றும் அனுபவம் மிக்க நேர்முகத்தேர்வு குழுவினால் வழங்கப்பட்ட புள்ளிகள் தொடர்பாக எதனையும் தெரிவிக்க முடியவில்லை

மேலும் இவ் அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்யும் போது திறந்த பத்திரிகை விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டு உள்வாரி மற்றும் வெளிவாரி விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்களை கோரி ஓர் சுயாதீன நேர்முகத்தேர்வு குழுவின் மூலம் நேர்முகத்தேர்வானது நடாத்தப்பட்டு உரிய பதவிகளிற்கு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது

(எ) பிரதி பணிப்பாளர் பதவி

எமது நிறுவகத்தினால் தகைமைகளை கொண்டிராத இரண்டு பிரதி பணிப்பாளர்கள் நியமனம் செய்யப்படவில்லை. அனைத்து பிரதி பணிப்பாளர்களும் நியமனம் செய்யப்பட்டமையானது அவர்கள் ஆஆ-1-1 சேவை வகுப்பில் 10 வருட சேவை காலத்தினை நிறைவு செய்து தடைகாண் பரீட்சையில் சித்தியடைந்த பின்னரே ஆகும்.

(எ) உதவி பணிப்பாளர் பதவி

கணக்காய்வின் போது வாய்மூலம் தெரிவிக்கப்பட்டதற்கு இணங்க உதவி பணிப்பாளர்களில் ஒருவரான திருமதி. இனோக்கா குணவர்தன என்ற அலுவலர் முன்னைய முகாமைத்துவ தீர்மானத்தின் பிரகாரம் உதவி பணிப்பாளர் (ஒருங்கிணைப்பு) என்ற பதவியிற்கு நியமிக்கப்பட்டார். இதுவரையில் இவ் அலுவலர் பயிற்சி பிரிவில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் பதவியின் பெயரினை மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கணக்காய்வின் போது வாய்மூலம் தெரிவிக்கப்பட்டதற்கு இணங்க மற்றைய உதவி பணிப்பாளராகிய திருமதி. எச். எதிரிசிங்க அவர்கள் உதவி பணிப்பாளர் (நிதி) என்ற பதவியின் பொருட்டு உள்வாங்கப்பட்ட வேளையில் தேவையான தகைமைகளை கொண்டிருந்தார்.

(எை) சட்ட அலுவலர் பதவி

இச் சட்ட அலுவலர் அவர்கள் 2013.09.16 ஆம் திகதியன்று அதிகாரசபையில் கடமையின் பொருட்டு அறிக்கையிட்டுள்ளார். அவர் 2011.12.13 ஆம் திகதியன்று உச்ச நீதிமன்றத்தில் வழக்கறிஞராக சத்தியப்பிரமாணம் செய்துள்ளதுடன் கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் (விசேட) பட்டத்தினை பெற்றுக்கொண்டுள்ளார். உச்ச நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டதன் பின்னர் 2011.12.13 ஆம் திகதி தொடக்கம் 2012.05.21 ஆம் திகதி வரையில் சிரேஷ்ட வழக்கறிஞர் ஒருவரின் கீழ் கனிஷ்ட வழக்கறிஞராக சேவையாற்றியுள்ளதுடன் 2012.05.22 தொடக்கம் 2013.09.03 ஆம் திகதி வரை தனியாரட நிதி நிறுவகமொன்றில் நீதி அலுவலராக கடமையாற்றியுள்ளார். ஆட்சேர்ப்பு நடைமுறையிற்கு இணங்க, நீதி அலுவலர் பதவி தொடர்பாக ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்கு நீதித்துறைசார் பட்டத்துடன் உச்ச நீதிமன்றத்தில் வழக்கறிஞராக சத்தியப்பிரமாணம்100மேற்கொண்டு ஒரு வருட சேவையினை பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

அதற்கிணங்க, இச் சட்ட அலுவலர் அதிகாரசபையில் கடமைக்கு அறிக்கையிடும் போது உச்ச நீதிமன்றத்தில் வழக்கறிஞராக சத்தியப்பிரமாணம் செய்து 01 வருடங்கள் மற்றும் 09 மாதங்கள் காலப்குதியினை பூர்த்தி செய்திருந்தமையின் காரணமாக ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

(எனை) உதவி பணிப்பாளர் (நிதி)

அதிகாரசபையில் உதவி பணிப்பாளர் (நிதி) பதவியின் பொருட்டு அனுமதி அளிக்கப்பட்டுள்ள அலுவலர்களின் எண்ணிக்கைக்கு மேலதிகமாக எவரும் நியமனம் செய்யப்படவில்லை. நிதி பிரிவில் 05 உதவி பணிப்பாளர் பதவிகளிற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

6 ஓர் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையொன்றிற்கு இணங்க ஆட்சேர்ப்புகள் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. அதற்கிணங்க, ஏற்றுக்கொள்ளப்பட்ட நேர்முகத்தேர்வுகள் மற்றும் செய்முறை கணிப்பீடுகள் மற்றும் இடமாற்ற செயன்முறைகள் போன்றவற்றினை நடைமுறைப்படுத்துவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

6(ய) தரவுகள் புதிய மென்பொருளில் பதிவேற்றம் செய்யப்பட்டுவருகின்றது

6(டி) • அதற்கிணங்க சரிசெய்யப்பட்டுள்ளது.

• அதற்கிணங்க சரிசெய்யப்பட்டுள்ளது

6(டி) அதற்கிணங்க சரிசெய்யப்பட்டுள்ளது